வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk
மலர் : 03 06.09.2022 செவ்வாய்க்கிழமை இதழ் : 271 பக்கங்கள் : 16


மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

## சிறுபான்மையினர் மத்தியில் வறுமை; சிறுவர்கள் வேலைக்கு செல்வது உயர்வு

### ஐ. நா. அறிக்கையாளர் கவலை

ஜெனிவா, செப். 06

இலங்கையில் சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் கிராமங்களில் வறுமை நிலவுகிறது. இதனால், சிறுவர்கள் வேலைக்கு செல்வது அதிகமாக உள்ளது என்று ஐக்கிய நாடுகள் (ஐ. நா.) சபையின் விசேட அறிக்கையாளர் டொமயா ஒபகட்டா தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் இலங்கை வந்த அவர் "அடிமைத்தனத்தின் சமகால வடிவங்கள் அதன் விளைவுகள்" அறிக்கையை ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கு சமர்ப்பித்துள்ளார். அதிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

15




## பிரான்ஸிலிருந்து வந்தவர் விபத்தில் உயிரிழந்தார்!

தென்மராட்சி, செப். 06

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதியதில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

தென்மராட்சி - இடைக்குறிச்சி - வரணியைச் சேர்ந்த ஆ. அருள்குமார் (வயது- 34) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

உயிரிழந்த நபர் தனது திருமணத்துக்காக பிரான்ஸிலிருந்து வந்திருந்தார். திருமணமாகி ஒரே மாதமான நிலையில் இன்னும் சில தினங்

15

# வெளிநாட்டு பொறிமுறையை அரசாங்கம் ஒருபோதும் ஏற்காது

### ஜெனிவா செல்லும் முன்னர் வெளிவிவகார அமைச்சர்

கொழும்பு, செப்ரெம்பர் 06

"மனித உரிமைகள் பேரவையின் கடந்த இரு தீர்மானங்களில், போர் காலத்தில் நடந்த மனித உரிமைகள் மீறல்கள் - போர் குற்றங்கள் தொடர்பில் விசாரிக்க வெளிநாட்டு பொறிமுறை, வெளிசாட்சியங்களை சேகரிக்கும் பொறிமுறை நாட்டுக்கு வெளியில் உள்ளவர்கள் இலங்கை பிரஜைகள் மீது குற்றம் சுமத்துதல், கலப்பு (வெளிநாட்டு - உள்நாட்டு) நீதிபதிகள் வந்து வழக்குகளை விசாரிக்க அனுமதித்தல் ஆகியன உள்ளடக்கப்பட்டன. இவை அனைத்தும் அரசமைப்புக்கு எதிரானவை இதற்கு எங்களால் ஒருபோதும் உடன்பட முடியாது." என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

15



## இந்தியாவிலிருக்கும் அகதிகளை நாட்டுக்கு அழைக்க நடவடிக்கை!

கொழும்பு, செப். 06

போர் காலத்தில் இந்தியாவுக்கு அகதிகளாக இடம்பெயர்ந்த இலங்கையர்கள் மீண்டும் நாடு திரும்பும் செயன்முறையை இலகுபடுத்துவதற்காக ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏகநாயக்க குழுவொன்றை நியமித்துள்ளார்.

15



## பிரித்தானியாவின் பிரதமராக லிஸ் ட்ரஸ் இன்று பதவியேற்பார்!

லண்டன், செப். 06

பிரித்தானியாவின் 56ஆவது பிரதமராக இன்று செவ்வாய்க்கிழமை லிஸ் ட்ரஸ் (வயது - 47) அம்மையார் பதவியேற்கவுள்ளார். அந்த நாட்டின் ஆளும் கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவராக அவர் நேற்று தெரிவா

15

## தாய், பிள்ளைகள் மந்தபோசணை; பாராளுமன்றில் இரு நாள் விவாதம்!

கொழும்பு, செப். 06

நாட்டில் பிள்ளைகள் மற்றும் தாய்மாரின் மந்த போசணை தொடர்பாக யுனிசெவ் நிறுவனம் வெளியிட்டிருக்கும் அறிக்கை தொடர்பில் இரண்டு நாள் விவாதம் பாராளுமன்றத்தில் இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை புதன்கிழமையும் நடைபெறவுள்ளன.

விவாதம் தொடர்பான பிரேரணை ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்படும்.

பாராளுமன்றம் இன்று செவ்

15

## ஜெனிவா பிரேரணையின் பின்னரே அடுத்தகட்ட தீர்மானம் எடுக்கப்படும்!

### நீதி அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, செப். 06

இம்முறை ஜெனிவா கூட்டத் தொடரில் எவ்வாறான பிரேரணை முன்வைக்கப்படும் என்பதைப் பார்த்த பின்னரே அடுத்த கட்ட தீர்மானம் எடுக்கப்படும் என்று நீதி அமைச்சரும் ஜெனிவா அமர்வுக்கான குழுவின் உறுப்பினருமான விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

15

## எரிவாயுவின் விலை குறைந்தது!

கொழும்பு, செப். 06

லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை நேற்று நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டது.

இதற்கமைய, லிட்ரோ 12.5 கிலோ எரிவாயு சிலிண்டரின் விலை 113 ரூபாயாலும், 5 கிலோ எரிவாயு சிலிண்டரின்

15

## உயர்தர, புலமைப்பரிசில் பரீட்சை திகதி அறிவிப்பு!

கொழும்பு, செப். 06

2022ஆம் ஆண்டுக்கான உயர்தர, புலமைப் பரிசில் பரீட்சைகள் நடைபெறும் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி 2022ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை டிசெம்பர் 4 ஆம் திகதி நடைபெறும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதேபோல, க. பொ. த. உயர்தரப் பரீட்சை டிசெம் பர் 5ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும் தெரிவித்துள்ளார். (ஐ)

## இலங்கைக்கு 400 கோடி டொலர் உதவி ஐ. நா. சபையில் தெரிவித்தது இந்தியா!

நியூயோர்க், செப். 06

உலகமயமாக்கலில் இந்தியா தனது ஆக்கபூர்வமான பங்களிப்பாக இலங்கைக்கு 400 கோடி டொலர்கள் மதிப்பிலான உணவு, நிதி உதவிகளை வழங்கியுள்ளது என்று ஐ. நா. பொதுச் சபையில் இந்தியா தெரிவித்துள்ளது.

ஐ. நா. பொதுச் சபையில் நேற்று முன்தினம் நடந்த அமைதிஉருவாக்க ஆணையம் (பி. பி. சி.) அறிக்கைகள் மற்றும் அமைதிஉருவாக்க நிதியத்தின் (பி. பி. எப்.) அறிக்கைகள் மீதான வருடாந்திர கூட்டு விவாதத்தில் ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி ருசிரா கம்போஜ் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த சில மாதங்களில் கிட்

15

## இப்படியும் நடக்கிறது...!

ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தால் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டு ஐம்பது நாட்களை எட்டவிருக்கின்றது. ஆனால், இன்னமும் அவரால் ஒரு நிலையான அமைச்சரவையை அமைக்க முடியவில்லை.

அதற்கு அவர்மீது குற்றம் சொல்லவும் முடியாதுதான். காரணம் அவரிடமிருப்பது மேலும் ஓர் உறுப்பினர் மாத்திரம் தான். அதுவும் அவர் ஜனாதிபதியானதால் வெற்றிடமான அவரின் இடத்துக்கு நிரப்பப்பட்டவர்.

அதையும்விட இருவரை வேண்டுமானால் கூட்டிக்கொள்ளலாம். ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து வந்த ஹரீன் பெர்னாண்டோவும் மனுஷ நாணயக்காரவையும் வேண்டுமானால் அவரின் கட்சிக்காரர்கள் என்று சொல்லலாம். காரணம் அவர்களும் அவரின் கட்சியில் இருந்து சஜித்துடன் சென்றவர்கள் தான்.

அப்படியிருக்கையில் அவரால் தான் விரும்பிய அமைச்சரவை ஒன்றை அமைப்பது என்பது எத்தகைய சிக்கலானது என்பதும் புரிந்து கொள்ளக்கூடியதே. ஆனால், அவர் மெல்ல மெல்ல - ஆனால் உறுதியாகக் கால்களை வைத்துவருகின்றார் என்றே அவரின் தரப்பு நம்பிக்கை வைத்துக் கொண்டிருக்கின்றது.

அண்மையில், தனது பட்ஜெட்டை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக பாராளுமன்றம் வந்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நடவடிக்கைகளை கவனித்தவர்கள் இதனையே சொல்கிறார்கள்.

பட்ஜெட்டை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக நிதி அமைச்சர் என்ற வகையில் பாராளுமன்றம் வந்திருந்த ரணில் விக்கிரமசிங்க அதுபற்றிய விவாதம் நடைபெற்று வாக்கெடுப்பு நடந்த அந்த மூன்று நாட்களும் பாராளுமன்ற வளாகத்திலேயே இருந்திருக்கின்றார்.

அதிலும் கூடுதலாக அவர் எதிரணியினருடனேயே காலத்தையும் நேரத்தையும் செலவிட்டதைக் காணமுடிந்தது என்கிறார் எமது பாராளுமன்ற செய்தியாளர்.

இதுபற்றி எழுதியுள்ள சிங்கள வார இதழ் ஒன்று, தனது பத்தியில் பின்கண்டவாறு எழுதியுள்ளது.

"எனது மாமா ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் அரசியல் நரித்தன மூளை எனக்கும் உதவுகின்றது", என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத் திட்ட விவாதத்தின் மூன்று நாட்களும் பாராளுமன்ற வளாகத்தில் தங்கியிருந்த ஜனாதிபதி, பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சி மண்டபத்தில் தனது பெரும்பாலான நேரத்தை செலவிட்டார். ஆளும் கட்சி உறுப்பினர்களைவிட எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் பழகி, இனிப்பான கதைகளைக்கூறி ஜனாதிபதி மகிழ்ந்தது எதிர்க்கட்சி உறுப்பினர்களால் பெரிதும் பாராட்டப்பட்டதுடன் ஆச்சரியமாகவும் பார்க்கப்பட்டது.

ஜனாதிபதி இவ்வாறு நட்புடன் நடந்துகொண்டமை குறித்து எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் கூறுகையில், "எந்த ஒரு ஜனாதிபதியும் இவ்வாறு பாராளுமன்றத்துக்கு வந்து எங்களுடன் பேசுவதில்லை", என்றாராம்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில், தனது அரசியல் ஆசான் ஜே. ஆர். மாமாவை உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள். அரச தலைவராக இருந்த ஜே. ஆர். அவ்வாறு செய்யவில்லை. அவர் அடிக்கடி பாராளுமன்றத்துடன் தொடர்பில் இருந்தார். அவர் அடிக்கடி வந்து சென்றார்", என்று கடந்த காலத்தை ரணில் நினைவு கூர்ந்தாராம்.

அந்த உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்று பலமான அரசாங்கத்தை அமைக்கும் தந்திரமாகவே ரணில் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் 'லொபி'யில் அதிக நேரத்தை செலவிட்டிருக்கலாம் என நினைக்கலாம். 113 பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லது அனைத்துக் கட்சிகள் அல்லது ஏனைய கட்சிகளின் ஆதரவுடன் அரசாங்கத்தை நடத்த விரும்புவதாக ரணில் அண்மையில் தெரிவித்திருந்தார்.'

எதிர்க்கட்சியினருடனான இந்த ரணிலின் ஊடாடலை பார்த்த அவருக்கு நெருக்கமான ஒருவர், "ஜே.ஆரின் மருமகன் ரணிலும் தந்திரங்கள் நிறைந்த வயதான நரிதான் என்பதை நிரூபிக்கின்றார்", என்றாராம்.

இவ்வாறு அந்த சிங்கள வாரப் பத்திரிகை எழுதியிருக்கின்றது.

புதிய அமைச்சரவையை விஸ்தரிப்பதில் அவர் ஏன் இவ்வளவு பொறுமையைக் கடைப்பிடிக்கிறார் என்பதை இப்போது ஊகிக்க முடிகின்றது.

எதிரணியிலிருந்து மாத்திரமல்ல, பொதுஜன பெரமுனவிலிருந்தும் தனது விசுவாசிகள் சிலரை உருவாக்கிக் கொண்டிருக்கிறார் என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

தனி ஒருவனாகப் பாராளுமன்றம் வந்திருந்த ரணில் எப்படி ஜனாதிபதியாக உயர்ந்தாரோ, அதேபோல தனி ஒருவனாக இருந்தாலும் தன்னோடு ஓர் அணியை உருவாக்கிக் கொண்டிருக்கிறார் என்கின்றன அந்த வட்டாரங்கள்.

பொறுத்தார் பூமி ஆள்வார் என்று சொல்வது இதைத் தானோ?

- ஊர்க்குருவி

# உணவுக்காக மக்களைப் போராட வைத்தோரை தண்டிக்க வேண்டும்!

## சம்பிக்க ரணவக்க எம். பி.



கொழும்பு, செப். 06

நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளி 55 இலட்சம் மக்களை உணவுக்காகப் போராட வைத்துள்ள அரசியல் வாதிகள், அரச அதிகாரிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

பொருளாதார நெருக்கடியை தீவிரப்படுத்திய ராஜபக்ஷக்களை நாட்டு மக்கள் புறக்கணித்தார்கள். ஆனால், தற்போது ராஜபக்ஷக்களை மீண்டும் அரசியலுக்கு கொண்டு வரும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்று 43ஆவது படையணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற புதிய இலங்கை சுதந்திர கட்சி காரியாலய திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், பெற்றுக்கொண்ட அரச முறை கடன்களை மீள செலுத்த முடியாது என இலங்கை உத்தியோகபூர்வமாக அறிவித்ததால் நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது என பொருளாதார நெருக்கடியை தீவிரப்படுத்திய பஸில் ராஜபக்ஷவின் தரப்பினர் குறிப்பிடுவது வேடிக்கையாகவுள்ளது.

நாட்டின் நிதி நிலைமை தொடர்பில் உண்மையை குறிப்பிடாமல் குறுகிய அரசியல் நோக்குக்காக பொய் உரைத்தமை பொருளாதார நெருக்கடிக்கு தீவிரமடைவதற்கு பிறிளுக்கு மத்தியிலும் பொதுஜன பெரமுன தனது குறுகிய அரசியல் நோக்கத்திற்காக செயல்பட்டது.

நாட்டின் நிதி நிலைமை குறித்து முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் அக்கறை கொள்ளவில்லை. மீண்டும் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றும் நோக்கில் செயல்பட்டதால் இன்று 55 இலட்சம் மக்கள் உணவுக்காக போராட வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது.

ராஜபக்ஷக்களின் முறையற்ற அபிவிருத்தி, வரையறையற்ற வெளிநாட்டு அரசமுறை கடன்களினால் நாடு நிச்சயம் வங்குரோத்து நிலைமை அடையும் என்பதை குறிப்பிட்டதால் 2013 ஆண்டு அமைச்சு பதவியில் இருந்து நீக்கப்பட்டேன். 2015ஆம் ஆண்டு பெரும் போராட்டத்தின் மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டது.

நல்லாட்சி அரசாங்கத்தின் லாட்சி அரசாங்கம் நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு செல்லவில்லை. நாட்டு மக்களுக்கு பல்வேறு வழிமுறைகளில் நிவாரணம் வழங்கப்பட்டது.

நாடு வங்குரோத்து நிலையடைவதற்கு மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் பொறுப்பு கூற வேண்டும். நாட்டின் நிதி நிலைமை தொடர்பில் பாராளுமன்றத்தையும் நாட்டையும் தவறாக வழி நடத்தி முழு நாட்டையும் வங்குரோத்து நிலைக்கு தள்ளியுள்ளார்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களை இலக்கு வைத்து கைதுகள் இடம்பெறுகின்றன. நாட்டின் பொருளாதாரத்தை வேண்டுமென்றே நெருக்கடிக்குள்ளாக்கி 55 இலட்சம் மக்களையும் உணவுக்காக போராட வைத்துள்ள அரசியல்வாதிகள், அரச உயர் அதிகாரிகள் சட்டத்தின் முன்னிலைப்படுத்தி தண்டிக்கப்பட வேண்டும் - என்றார். (ஐ)

## சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், செப். 06

ஊர்காவற்றுறை - நாரந்தனை வடக்கு பண்டாரபுலத்தில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோவில் தேர் உற்சவத்தை முன்னிட்டு சிறப்புச் சொற்பொழிவு இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆலயத்தின் பிரதான மண்டபத்தில் காலை 7.30 மணிக்கு சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இந்த சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

இதில், 'ஆலய வாழிபாடு' எனும் தலைப்பில் இளம் சைவப்புலவர் நித்தியபாபுதரன் சொற்பொழிவாற்றவுள்ளார்(ஐ)

• • •

யாழ்ப்பாணம், செப். 06

நீர்வேலி அருள்மிகு கந்த சுவாமி ஆலயத்தில் நடத்தப்படும் வாராந்த சிறப்புச் சொற்பொழிவு கோயிலின் சண்முக விலாச மண்டபத்தில் எதிர் வரும் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் தலைமை உரையை பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கம் ஆற்றுவார்.

சிறப்புச் சொற்பொழிவை இளம்சைவப்புலவர் ச.நவநீதன் 'என்னபுண்ணியம் செய்தனை நெஞ்சமே' என்ற தலைப்பில் ஆற்றுவார். (ஐ)

# மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்துக்கு ஓகஸ்டில் ரூ. ஒன்றேகால் கோடி இலாபம்!

கொழும்பு, செப். 06

மரமுந்திரிகை (கஜூ) விற்பனை மூலம் கடந்த ஓகஸ்ட் மாதத்தில் ஒரு கோடியே இருபத்து மூன்று இலட்சம் ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் தலைவர் சாரங்க ரத்நாயக்க தெரிவித்தார்.

முன்னதாக, கடந்த மார்ச் மரமுந்திரிகை விற்பனையில் அதிக வருமானம் கிடைத்தது. அந்த மாதத்தில் ஒரு கோடியே பத்து இலட்சம் ரூபாய் வருமானம் கிடைத்தது.

கூட்டுத்தாபனத்தால் ஒரு கிலோ மரமுந்திரிகை ரூ. 5,700க்கும், தனியார் முந்திரி கடைகளில் முந்திரி கிலோ ரூ. 9000இற்கும் விற்கப்படுகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில், கடந்த ஆண்டு (2021) டிசெம்பரில் மரமுந்திரிகை விற்பனை மூலம் அதிக வருமானம் ஈட்டப்பட்டது. அந்த மாதத்தில் ஒரு கோடியே நாற்பத்து எட்டு இலட்சம் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# ரயில் திணைக்களத்தின் நிலங்களில் குறுகிய பயிர் செய்கைக்கு அனுமதி!

கொழும்பு, செப். 06

ரயில் பாதைக்கு அருகிலுள்ள நிலங்களில் குறுகிய கால பயிர் செய்கைக்கு அனுமதி வழங்கப்படும் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

வரிச்சலுகை முறையின் கீழ் வழங்கப்படுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

உணவு நெருக்கடி காரணமாக பயிர்ச்செய்கைக்கான அவசரத் தேவையால், ரயில் திணைக்களத்துக்கு சொந்தமான நிலங்களில் குத்தகை அடிப்படையில் குறுகிய கால பயிர்ச் செய்கைக்கான அனுமதியை விவசாய அமைப்புகளுக்கு வழங்க கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அந்த நிலங்களில் எந்தவித கட்டுமானமும் செய்ய முடியாது, குறுகிய கால பயிர்களான மிளகாய், உருளைக்கிழங்கு, உலர் வலயத்தில் விளையும் பிற பயிர்கள், தானியங்கள், கீரைகள் போன்றவற்றை பயிரிட முடியும் என் றும், விவசாயிகள் அமைப்புகள் மட்டத்தில் வலயச் செயலரை சந்தித்து செயல்படுத்த வேண் டும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஐ)

ஈழநாடு
Eelanadu
06.09.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஆவணி 22

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# புதிய அரசியல் கூட்டணிகள்?

ராஜபக்ஷக்களுக்கு எதிரான கிளர்ச்சியை தொடர்ந்து புதிய அரசியல் கூட்டணிகள் மற்றும் கட்சிகள் வெளித்தெரியத் தொடங்கியிருக்கின்றன. பொதுஜன பெரமுனவின் முன்னாள் கூட்டாளிகளான விமல் வீரவன்ஸ தலைமையில் புதியதோர் அரசியல் கூட்டணியொன்று உருவாகியிருக்கின்றது. இதேவேளை, குமார வெல்கமவின் தலைமையில் புதிய இலங்கை சுதந்திரக் கட்சி என்னும் பெயரில் பிறிதோர் அணி உருவாகியிருக்கின்றது. இதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆசீர்வாதமுண்டு. இதேபோன்று, பொதுஜன பெரமுனவிலிருந்து வெளியேறி சுயாதீனமாக செயல்பட்டு வரும் டலஸ் அழகப்பெரும தலைமையில் பிறிதோர் அணியும் உருவாகியிருக்கின்றது. ஒரு தேர்தலை எதிர்கொள்ளும் போதுதான் இவற்றின் அரசியல் தாக்கங்களை அறியமுடியும்.

கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றியின் மூலம் ராஜபக்ஷக்களின் பொதுஜன பெரமுன சிங்கள மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்குள்ள தனிக் கட்சியாக உருவெடுத்தது. அதுவரையில் இலங்கையில் செல்வாக்குச் செலுத்திவந்த இரண்டு பிரதான பாரம்பரிய கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டுமே ஒரே நேரத்தில் வீழ்ச்சியடைந்தன. பாரம்பரிய கட்சிகளுக்கு இனி இடமில்லை என்னும் சூழல் உருவாகியது. சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் எழுச்சியைத் தொடர்ந்தே சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியென்னும் புதிய கூட்டணி உருவாகியது. எவ்வாறு பாரம்பரிய சிறீ லங்கா சுதந்திரக் கட்சியை புறம்தள்ளி ராஜபக்ஷக்கள் பொதுஜன பெரமுனவை எழுச்சியுறச் செய்தனரோ - அதே உத்தியையே சஜித் பிரேமதாஸவும் பின்பற்றியிருந்தார்.

ஆனால், எதிர்பாராத பொருளாதார நெருக்கடியால் நிலைமைகள் தலைகீழாகியிருக்கின்றன. 2024 தேர்தலில் தனித்து பெரும்பான்மையை நிரூபிக்கக்கூடிய நிலையில் எந்தவொரு கட்சியும் இல்லை போன்றே தெரிகின்றது. பரந்தளவான அரசியல் கூட்டணி ஒன்றின் மூலமே தேர்தலை எதிர்கொள்ள நேரிடலாம். இந்த விடயங்களைக் கருத்தில் கொண்டுதான் தங்களைத் தனி அணியாகக் காண்பித்துக் கொள்வதில் சிலர் ஆர்வம் காண்பிக்கின்றனர்.

இந்தப் பின்புலத்தில் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் என்ன நடக்கின்றது? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்திக் கொள்வதற்கான எந்தவொரு முயற்சியும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. அடுத்த தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வதென்னும் வியூகம் தொடர்பிலும் தமிழ்த் தேசியக் கட்சிகள் சிந்திப்பதாகத் தெரியவில்லை. இன்றைய சூழலில், தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் மூன்று அணிகள் இருக்கின்றன. பிரதானமானது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏனைய அணிகளான கஜேந்திரகுமார் அணி மற்றும் விக்னேஸ்வரன் அணி.

கஜேந்திரமார் மற்றும் விக்னேஸ்வரன் அணிகள் ஒப்பீட்டடிப்படையில் பலமானவைகள் அல்ல. ஆனால், இவைகள் அனைத்தும் பரந்தளவிலான கூட்டணி ஒன்றுக்குள் வரமுடிந்தால் அடுத்துவரவுள்ள தேர்தலை மிகவும் இலகுவாக எதிர்கொள்ள முடியும். இதேவேளை, 2004 தேர்தலுக்குப் பின்னரான காலத்தில் அதிக ஆசனங்களை வெற்றி கொள்வதற்கான வாய்ப்பும் உருவாகும். ஆனால், கஜேந்திரகுமார் எப்போதுமே ஒற்றுமைக்கு சார்பாக இருந்ததில்லை. இந்த நிலையில், ஏனைய தரப்புக்கள் இணைந்து பயணிப்பதற்கான இணக்கப்பாடுகள் தொடர்பில் சிந்திப்பதற்கான வாய்ப்புண்டு. ஆனால், நிலைமைகளை அவதானித்தால் கூட்டமைப்பு இருக்குமா என்னும் கேள்வியே பலரிடம் உண்டு. தமிழ் அரசுக் கட்சி தனித்து செல்ல வேண்டுமென்னும் போக்கு ஒன்றும் அக்கட்சியினர் மத்தியிலிருப்பதாகத் தெரிகின்றது. கூட்டமைப்பு உடைவுறும் நிலைமை ஏற்படுமாக இருப்பின் அடுத்த தேர்தலில் தமிழ்த் தேசிய தரப்புக்கள் மேலும் பின்னடைவுகளை சந்திக்க நேரிடலாம். கிழக்கு மாகாணத்தில் ஓரளவு தமிழ் அரசு கட்சியால் தாக்குப்பிடிக்க முடியுமாக இருந்தாலும்கூட வடக்கு மாகாணத்தில் குழப்பமான சூழலே ஏற்படும்.

அடிப்படையில் இது அரசியல் கூட்டணிகளை பலப்படுத்திக் கொள்ள வேண்டிய காலமாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் கட்சிகள் குறுகிய தேர்தல் நலன்களை முதன்மைப்படுத்தி தங்களைத் தாங்களே சிதைத்துக் கொண்டால் தற்போது பலவீனமாக இருக்கும் பேரம்பேசும் தமிழரின் ஆற்றலானது மேலும் பலவீனமடையும். இது தொடர்பில் வடக்கு - கிழக்கிலுள்ள சிவில் சமூகக் குழுக்கள் அரசியலில் ஆர்வம் காண்பிக்கும் மதத் தலைவர்கள், புத்திஜீவிகள் போன்றோர் கூடுதல் கவனமெடுக்க வேண்டும்.

# 13ஆவது திருத்தச் சட்டத்தின் முழுமையான அமுலாக்கத்தை கோரும் அமைச்சர் டக்ளஸ்!

**அலசுவது இராஜதந்திரி**

ஈழ மக்கள் ஜனநாயக கட்சி தலைவரும் மீன்பிடித்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கடந்தகால ஆணைக்குழுக்களின் முடிவுகள், தீர்மானங்கள் சம்பந்தமாக ஆராய்ந்து சமர்ப்பிப்பதற்கான நீதியரசர் நவாஸ் தலைமையிலான விசேட ஆணைக் குழுக்கு தெரியப்படுத்தியுள்ள விடயங்கள் 13ஆவது திருத்தச் சட்டத்தின் முக்கியத்துவத்தை மீளவும் இடித்துரைப்பனவாக இருக்கின்றன.

1987ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தையடுத்து அறிமுகமான 13ஆவது திருத்தச் சட்டமே இன்றுவரை வடக்கு - கிழக்கு பிரச்னைக்கான நிரந்தர தீர்வைக் கொண்டுவரக்கூடியதாக இருப்பதை இலங்கையில் அனைத்து தமிழ் தரப்பினரும் நன்குணர்ந்துள்ளனர். ஆனால், இந்த வருடத்துடன் 13ஆவது திருத்தச் சட்டம் அமுலுக்கு வந்து 35 வருடங்களான போதிலும் அதன் முழுமையான அமுலாக்கம் கானல் நீராகவே இருக்கின்றது.

"ஆறாப் புண்ணை காட்டி யாசகம் பெறுவது" போல வடக்கு - கிழக்கு தமிழ் தரப்பினர் 13ஆவது திருத்தச்சட்டம் அமுலாக்கப்பட வேண்டும் என்று இடையறாது கூறிவருகின்றனரே தவிர, அதன் அமுலாக்கம் குறித்து இந்திய தரப்பிடமோ அல்லது சர்வதேச சமூகத்திடமோ எவ்விதத்திலும் அழுத்தம்திருத்தமான கோரிக்கையை உறுதிபட எடுத்துரைத்து அந்தச் சட்டத்தின் அமுலாக்கத்தை வலியுறுத்துவோராகக் காணப்படவில்லை.

இந்தத் தருணத்திலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நீதியரசர் நவாஸ் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ள 13ஆவது திருத்தச் சட்ட அமுலாக்கம் பற்றிய விடயங்கள் தமிழ் தரப்பினரின் ஒருமித்த அரசியல் செயல்பாட்டை அந்தத் திருத்தச் சட்டம் குறித்து வேண்டி நிற்கின்றது.

13ஆவது திருத்தச் சட்டம் வெறுமனே ஓர் அரசியல் தீர்வுக்கான பரிகாரமாக மட்டும் இருக்கவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் தவிர ஏனைய தமிழ் ஆயுதப் போராட்ட அமைப்புகள் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா போன்ற முன்னாள் போராளிகள் அரசியல் நீரோட்டத்தில் நம்பிக்கை கொள்ளவும் வழிவகுத்திருந்தது.

இருந்தபோதிலும், இலங்கை அரசியல் தரப்போடு நல்லிணக்க அரசியல் மூலம் அரசியல் தீர்வை 13ஆவது திருத்தச் சட்டத்தின் மூலமாக அமுலாக்க முடியும் என்ற நம்பிக்கையோடு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அன்று முதல் இன்று வரை இருந்து வருவதையே நீதியரசர் நவாஸ் ஆணைக்குழுவின் கவனத்துக்கு அவர் தெரிவித்துள்ளவை எடுத்துக் காட்டுபவையாக இருக்கின்றன.

"நெஞ்சுக்கு நீதி" என்ற அடிப்படையில் பார்க்கப்போனால் அரசியல் தீர்வு என்று கூறி வரிந்துகட்டி பாசாங்கு செய்யும் வடக்கு - கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் தரப்பினர், தாம் அரசியலில் சவாரி விடுவதற்கான ஒரு நல்ல விடயமாக 13ஆவது திருத்தச் சட்டத்தை கையிலெடுத்துள்ளனரே தவிர,



அதன் முழுமையான அமுலாக்கம் குறித்து பேச்சளவிலேயே இருந்து வருகின்றனர்.

இத்தகைய தருணத்திலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 13ஆவது திருத்தச் சட்டத்தின் அமுலாக்கம் குறித்து தெரிவித்துள்ளார். 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது இருந்தவர்களில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒருசில அரசியல் வாதிகளில் ஒருவராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இருக்கின்றார். அத்துடன், அந்தத் திருத்தச்சட்டம் முழு அளவிலான அவரின் அரசியல் பிரவேசத்துக்கும் வழியமைத்திருந்தது.

இந்திய - இலங்கை அரசியல் தரப்பினர் மட்டுமல்ல. சர்வதேச சமூகமும் இலங்கையின் வடக்கு - கிழக்கு அரசியல் தீர்வுக்கு 13ஆவது திருத்தச்சட்டமே ஏற்புடையதென்பதை உணர்ந்துள்ளனர்.


இதுதவிர, அரசியல் ரீதியாக தீர்க்கப்பட வேண்டியவை குறிப்பிடத்தக்கவையாக இருக்கலாம். ஆனால், நல்லிணக்கமான போக்கு மூலமாக பலதையும் சாதிப்பதோடு அரசியல் அணுகுமுறைகளையும் பலப்படுத்தலாம் என்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அரசியல் ஆளுமை நல்ல உதாரணமாக இருக்கின்றது. இதற்கு அவர் நிறையவே விலை கொடுத்துள்ளார் என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

இதேவேளை, வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் தரப்பின் போக்கை எடுத்துக் கொண்டால் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அமுலாக்கம் தொடர்பாக "பாம்புக்கு வாலையும் மீனுக்கு தலையையும்" காட்டுவது போல இருந்து வருவதையே அறிய முடிகின்றது.

இத்தகைய பின்னணியில் அரசியல் ரீதியான கருத்து வேறுபாடுகள் பலதரப்பட்டவையாக இருக்கலாம். ஆனால், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 13ஆவது திருத்தச் சட்டம் குறித்து வெளியிட்டுள்ள கருத்து அரச தரப்பில் அவர் இருந்தபோதிலும் இந்தத் திருத்தச் சட்டம் தொடர்பாக ஏனைய தமிழ் தரப்பினரையும் உள்வாங்கும் விதத்தில் ஓர் ஒத்திசைவான போக்கில் இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

எனவே வடக்கு - கிழக்கின் உறுதியான அரசியல் தீர்வு விடயத்தில் 13ஆவது திருத்தச் சட்டத்தின் முழுமையான அமுலாக்கத்துக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையும் உள்ளடக்கிய ஒரு புதிய அணுகுமுறையொன்றை உருவாக்குவதே காலத்தின் தேவையாக இருக்க முடியும்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு



செப்ரெம்பர் - 06 செவ்வாய்க்கிழமை
சுபகிருது வருடம் - ஆவணி 21
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : ஏகாதசி




**மேடம்**

கேட்ட இடத்தில் இருந்து உதவிகள் வந்து சேரும். வியாபாரத்தில் ஏற்பட்ட பிரச்னை நீங்கும்.அரசு வழியில் தடைபட்டிருந்த வேலைகள் முடியும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும்.

**இடபம்**

புதிய முயற்சிகள் இழுபறியாகும். புதிய முயற்சிகளை ஒத்தி வையுங்கள். உங்கள் திறமைக்கு சவாலான நாள்.பணியிடத்தில் திடீரென்று பிரச்னை தோன்றும். பேச்சில் கவனம் தேவை.

**மிதுனம்**

நம்பிக்கையுடன் செயல்பட்டு உங்கள் செயலில் முன்னேற்றம் காண்பீர்கள்.எதிர்ப்புகள் விலகும். வாழ்க்கைத்துணை வழியில் ஆதாயம் உண்டாகும்.

**கடகம்**

பண வரவில் ஏற்பட்ட தடை விலகும். அரசு வழியிலான எதிர்பார்ப்பு நிறைவேறும்.பணியிடத்தில் உங்கள் செயல்களுக்கு வரவேற்பு உண்டாகும். எதிர்பாராதவற்றில் லாபம் காண்பீர்கள்.

**சிம்மம்**

எதிர்பார்த்தவற்றில் ஆதாயம் காண்பீர்கள். குடும்ப நிலையை உயர்த்த முயற்சிப்பீர்கள். நீங்கள் எதிர்பார்த்த வருவாய் வந்து சேரும். உங்கள் முயற்சி லாபமாகும்.

**கன்னி**

வரன் தேடி வந்தவர்களுக்கு நற்செய்தி வரும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு உண்டு.திடீர் பயணம் அலைச்சலை உண்டாக்கும் என்றாலும், உங்கள் எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். அனுகூலம் ஏற்படும்.

**துலாம்**

குடும்பத்தினர் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். உங்களின் முயற்சி ஒன்று நிறைவேறும். வியாபாரத்தை விருத்தி செய்வீர்கள். நண்பர்களின் உதவியால் எதிர்பார்த்தவை நிறைவேறும்.

**விருட்சிகம்**

உங்களை விட்டு விலகிச் சென்ற வாடிக்கையாளர்கள் மீண்டும் உங்களைத் தேடி வருவார்கள். தம்பதி இடையே ஏற்பட்ட பிரச்னை விலகும். எதிர்பார்த்த வருமானம் உண்டு.

**தனுசு**

மனதில் குழப்பம் ஏற்படும். உங்கள் பிரச்னைகளை பிறரிடம் கொண்டு செல்ல வேண்டாம்.சிலர் உங்களை சீண்டிப் பார்க்க முயற்சிப்பர். எந்த நிலையிலும் அமைதியை இழக்காதீர்கள்.

**மகரம்**

வாகனப் பயணத்தில் கவனம் தேவை. வருவாயை விட செலவுகள் அதிகரிக்கும். பேச்சில் நிதானம் தேவை. இன்று அவசர வேலைகளையும் போராடி முடிக்க வேண்டியதாக இருக்கும்.

**கும்பம்**

உங்கள் செயல்கள் ஆதாயத்தை உண்டாக்கும். பிறரது பிரச்னைகளை தீர்ப்பீர்கள். நண்பர்கள் உதவி செய்வார்கள். பணியிடத்தில் ஏற்பட்ட நெருக்கடிகள் விலகும். செல்வாக்கு உயரும்.

**மீனம்**

வியாபாரத்தில் நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி வெற்றியாகும். எதிர்பார்த்த வரவு உண்டு.நீண்ட நாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். புதிய முயற்சி அனுகூலமாகும். மற்றவர்களால் மதிக்கப்படுவீர்கள்.

# காரைக்கால் மேடு மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல்!

## ஆறு பேர் படுகாயம்

*சென்னை, செப். 06*

காரைக்கால் மேடு பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் நடத்திய தாக்குதலில் ஆறு மீனவர்கள் படுகாயமடைந்தனர். இதில், ஒருவர் தஞ்சை அரசு மருத்துவமனையில் மேலதிக சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருபவை வருமாறு,

காரைக்கால் மாவட்டம் காரைக்கால் மேடு பகுதியைச் சேர்ந்தவர் ராஜ்குமார். இவருக்கு சொந்தமான விசைப்படகில் கடந்த இரண்டாம் திகதி இரவு காரைக்கால் துறைமுகத்தில் இருந்து 15 பேர் மீன் பிடிக்க கடலுக்கு சென்றனர்.

கோடியக்கரைக்கு தென்கிழக்கு இந்திய எல்லைக்குள் அவர்கள் மீன்பிடித்து கொண்டிருக்கும் போது அங்கு அத்துமீறி நுழைந்த இலங்கை கடற்படையினர் மீன்பிடித்து கொண்டிருந்த ராஜ்குமாரின் படகைச் சுற்றி வளைத்து கடுமையாக தாக்கினர்.

மேலும் விசைப்படகில் இருந்த திசை காட்டும் கருவி ,வாக்கி டாக்கி ,ஜிபிஎஸ் கருவி உள்ளிட்ட உபகரணங்களை சேதப்படுத்தினர். படகில் இருந்தவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ராஜ்குமார் ,தண்டபாணி, மதன், அருண்குமார் மாணிக்கவேல் சூர்யா ஆகிய 6 பேர் பலத்த காயமடைந்தனர்.

நேற்று அவர்கள் கரை திரும்பிய நிலையில், காரைக்கால் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

இவர்களில், இவர்களில் படகின் உரிமையாளர் ராஜ் குமாருக்கு பலத்த காயம் ஏற்பட்டதால் உயிருக்கு ஆபத்தான நிலையில் மேல் சிகிச்சைக்காக தஞ்சைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக காரைக்கால் மீன்வளத் துறை மற்றும் மாவட்ட ஆட்சியரிடம் பாதிக்கப்பட்ட மீனவர்களின் உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

(ஐ)

# தமிழ்நாட்டின் புதிய திட்டம் இந்தியாவுக்கே முன்னோடி!

## டில்லி முதல்வர் புகழாரம்

*சென்னை, செப். 06*

“புதுமைப்பெண் திட்டம் தமிழகத்தில் உள்ள பெண்களுக்கு மட்டுமின்றி நாட்டில் உள்ள அனைத்து பெண்களுக்குமே முன்னோடித் திட்டமாக விளங்கப்போகிறது” என்று ஆம் ஆத்மி கட்சி ஒருங்கிணைப்பாளரும் டில்லி முதல்வருமான அரவிந்த் கேஜ்ரிவால் கூறியுள்ளார்.



தமிழக அரசு சார்பில் சென்னையில் நடந்த விழாவில், 26 தகைசால் மற்றும் 15 மாதிரி பாடசாலைகளை அவர் தொடக்கி வைத்தார். அதன் பின்னர், பேசிய அவர்,

தமிழகத்தில் இன்று கல்வித்துறையில் பல முன்னணி நடவடிக்கைகள் தொடங்கப்படுகின்றன. 26 தகைசால் பள்ளிகள் மற்றும் 15 மாதிரி பள்ளிகள் ”புதுமைப்பெண்” என்ற முன்னோடித் திட்டம் தொடங்கப்படுகிறது.

இந்தியாவில் வெவ்வேறு அரசியல் கட்சிகள் மாநிலங்களில் இருந்தாலும், மாநில அரசுகள் பல்வேறு புதுமையான நல்ல திட்டங்களைக் கொண்டு வருகின்றன. அந்த அனுபவங்களை ஒவ்வொரு மாநில அரசுகளும் கற்றுக்கொள்ள வேண்டும்” - என்றார்.

(ஐ)

# 2,500 விநாயகர் சிலைகள் சென்னை கடலில் கரைப்பு

*சென்னை, செப். 06*

சென்னையில் மேளதாளங்கள் முழங்க ஊர்வலமாக கொண்டுவரப்பட்டு 2,500 விநாயகர் சிலைகள் கடலில் கரைக்கப்பட்டன.



சென்னை உட்பட தமிழகம் முழுவதும் கடந்த மாதம் 31ஆம் திகதி விநாயகர் சதுர்த்தி பண்டிகை விமரிசையாக கொண்டாடப்பட்டது. இதையொட்டி, இந்து முன்னணி உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் சார்பில் தமிழகம் முழுவதும் பொது இடங்களில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட விநாயகர் சிலைகள் வழிபாட்டுக்காக வைக்கப்பட்டிருந்தன.

சென்னையில் 1,352 பெரிய சிலைகள் உட்பட 5 ஆயிரம் சிலைகள் பொது இடங்களில் வைக்கப்பட்டிருந்தன.

இந்த சிலைகளை 4 இடங்களில் பகல் 12 மணி முதல் இரவு 8 மணி வரை சிலைகளை கடலில் கரைப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.

இதன்படி, பல்வேறு பகுதிகளில் இருந்து நேற்று காலை 9 மணி முதல் விநாயகர் சிலைகள் வாகனங்களில் மேளதாளங்கள் முழங்க ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டன.

மசூதி, தேவாலயம் உள்ளிட்ட பிற மத வழிபாட்டு தலங்களின் முன்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஏராளமான பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில், 2,554 விநாயகர் சிலைகள் சென்னை கடலில் நேற்று முன்தினம் கரைக்கப்பட்டன.

(ஐ)

# மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறை!

யாழ்ப்பாணம், செப். 06

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இருநாள் பயிற்சிப் பட்டறை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 10ஆம்,11ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) காலை 8.30 மணி தொடக்கம் பி.ப. 2.00 மணி வரை பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 'மறைநதி' ஊடக மைய மண்டபத்தில் (மறைக்கல்வி நடுநிலைய வளாகம்) இந்தப் பயிற்சி பட்டறை நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் 8 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்பாக தமது பெயர், விபரங்களை யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

# கடற்படையினரின் தாக்குதலில் வலைப்பாட்டில் ஒருவர் காயம்!

கிளிநொச்சி, செப். 06

**வலைப்பாடு பகுதியில் குடும்பஸ்தர்மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். அத்துடன், அவருக்கு சொந்தமான இரு கைபேசிகளையும் அவர்கள் எடுத்துச் சென்றனர் என்று கூறப்படுகின்றது.**



இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. இதில், அதே இடத்தைச் சேர்ந்த இராசரத்தினம் நிமால் (வயது 43) என்ற 3 பிள்ளைகளின் தந்தை படுகாயமடைந்து கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் 3.30 மணியளவில், தாக்குதலுக்கு இலக்கான நபரின் படகை அவரின் நண்பர்கள் கடலிற்கு எடுத்து சென்றுள்ளனர். மாலை ஆகியும் அவர்கள் கரை திரும்பாத நிலையில் குறித்த நபர் கடற்கரைக்கு சென்று பார்த்துள்ளார்.

இந்நிலையில், 6 மணியளவில் கரைக்கு திரும்பிய படகு, கடற்படை முகாமுக்கு முன்பாக கரை ஏற்றப்பட்டது. இந்த நிலையில், படகை செலுத்தியவர்கள், கடற்படை முகாமுக்கு பதிவுக்காக சென்றுள்ளனர். இதன்போது தமது படகில் ஏற்றி வந்த மண்ணெண்ணெயை பதிவு மேற்கொள்ளும் பகுதிக்கு கொண்டு சென்றுள்ளனர்.

மண்ணெண்ணெய் கொள்கலனை அகற்றுமாறு அவர்களிடம் கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்ததை அடுத்து அவர்கள் அதனை அங்கிருந்து அகற்றியுள்ளனர். இந்த நிலையில் இரு தரப்பினருக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

6.30 மணியளவில் இடம்பெற்ற கருத்து முரண்பாட்டின்போது, கடற்படை அதிகாரி ஒருவர் அவர்களை அச்சுறுத்தும் வகையில் துப்பாக்கியை சூட்டுக்கு ஏற்ற வகையில் தயார் செய்தாரென்றும் அதனை ஒளிப்பதிவு செய்ய முற்பட்டபோது கைபேசியை பறித்து, பின்னர் தம் மீது தாக்குதல் நடத்தினர் என்றும் மீனவர் கூறினார்.

இதன்போது, தன்னையும், தன்னுடன் நின்றவர்களையும் கடற்படையினர் துரத்தி துரத்தி தாக்கினர் எனவும், இதில், தான் படுகாயமடைந்தார் என்றும் அவர் கூறினார். காயங்களுக்கு உள்ளான நபர் சுயநினைவிழந்து கிடப்பதை அவதானித்த கிராமத்தவர்கள், அவரை வேரவில் வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர்.

தொடர்ந்து மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதேவேளை, குறித்த நபருக்கு சொந்தமான இரண்டு கையடக்க தொலைபேசிகளும், கடற்படையினர் எடுத்து சென்றுள்ளனர் என்று அவரின் குடும்பத்தவர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கோட்டாபயவுக்கு பிரதமர் பதவி எந்த பேச்சும் நடைபெறவில்லை!

## ஜனாதிபதியின் ஆலோசகர் ருவான்



கொழும்பு, செப். 06

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பிரதமராக நியமிப்பது பற்றியோ, வேறு எந்தப் பதவியையும் வழங்கும் தொடர்பிலோ எந்தப் பேச்சும் நடைபெறவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கோட்டாபய ராஜபக்ஷ தொடர்பாக சிறீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் எந்த ஒப்பந்தமும் இல்லை. தான் அரசியலில் நீடிப்பதா? இல்லையா? என்பதை கோட்டாபய இன்னும் தீர்மானிக்கவில்லை.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில், கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் இலங்கைக்கு வர அனுமதிக்கப்பட்டுள்ளதோடு அவருக்குப் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது" - என்றார். (ஐ)

# முதலைகளின் அச்சுறுத்தலை தவிர்க்க தொண்டைமானாறின் குறுக்கே வேலி!



வடமராட்சி, செப். 06

தொண்டைமானாறில் முதலைகளின் அச்சுறுத்தல் காணப்படுவதால் ஆற்றின் குறுக்கே இரும்பு கம்பியினாலான வேலி அமைக்கப்பட்டுள்ளது.

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த பெருந்திருவிழா தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களில் இருந்தும், வெளிமாவட்டங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் பலர் பங்கேற்று வருகின்றனர். ஆலயத்திற்கு வருவோரில் பெரும்பாலானோர் தொண்டைமானாறிலேயே நீராடி முருகனை வழிபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் ஆற்றில் முதலைகளின் நடமாட்டம் அவதானிக்கப்பட்டது. இதையடுத்து, ஆற்றில் நீராடுபவர்களை அவதானமாக இருக்குமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்திருந்தனர். தற்போது ஆற்றின் குறுக்காக இரும்பு கம்பியாலான வேலி அமைக்கப்பட்டுள்ளது.

இந்த இரும்புவேலி முதலைகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தி நீராடுபவர்களுக்கு பாதுகாப்பை ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவித்துள்ள நிர்வாகம், முதலைகளை அங்கிருந்து அகற்ற பல தரப்புகளுடனும் பேச்சுகளை நடத்தி வருவதாகத் தெரிவித்தனர். (ஐ-02)

# கீரிமலையில் திருட்டு சந்தேகநபர் கைது!

யாழ்ப்பாணம், செப். 06

கீரிமலையில் வீடொன்றை உடைத்து கொள்ளையில் ஈடுபட்ட நபர் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் புன்னாலைக்கட்டுவன் பகுதியை சேர்ந்தவர் எனவும், கைது செய்யப்பட்டவரிடமிருந்து களவாடப்பட்ட நகைகள் மற்றும் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் கூறியுள்ளனர். (ஐ)

# கனகராயன்குள கட்டட விவகாரம் ஆளுநரின் கோரிக்கை அர்த்தமற்றது!

## சுரேஷ் பிறேமசந்திரன்



யாழ்ப்பாணம், செப். 06

கனகராயன்குளத்தில் இந்திய ரயில் கட்டுமான நிறுவனம் தமது தேவைக்காக அமைத்து பின்னர் நன்கொடையாக வழங்கிய கட்டடங்களை பொலிஸாருக்கு வழங்குமாறு வடக்கு ஆளுநர் அழுத்தம் கொடுத்து வருகிறார் என்று சுரேஷ் பிறேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், வவுனியா வடக்கு பிரதேச செயலகம் ஒதுக்கி வழங்கிய இந்தக் காணியை பொலிஸாருக்கு வழங்குமாறு கோரும் ஆளுநரின் செயல் அர்த்தமும் நியாயமும் அற்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும் இதுபற்றி தெரியவருகையில்,

வடக்கு மாகாணத்தில் தடைபட்டிருந்த ரயில் சேவையை மீள ஆரம்பிப்பதற்கான கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கு இந்திய ரயில் சேவை கட்டுமான நிறுவனத்துக்கு இலங்கை அரசாங்கம் ஒப்பந்தத்தை வழங்கியிருந்தது.

இந்திய கட்டுமான நிறுவனம் தமது அலுவலகத் தேவைகளுக்காகவும் ஊழியர்கள், அதிகாரிகள் தங்கியிருப்பதற்காகவும் கனகராயன்குளத்தில் மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் சில கட்டடங்களை அமைத்தது. தண்டவாளம் அமைக்கும் பணி நிறைவடைந்தவுடன் கட்டடத்தை தனது நன்கொடையாக வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திடமே வழங்கியது.

ஆனால், தற்போது அந்த இடத்தை பொலிஸ் பயிற்சிப் பாடசாலைக்கு வழங்குமாறு வட மாகாண ஆளுநர் அழுத்தம் கொடுத்து வருகின்றார்.

ஆளுநரின் கோரிக்கை அர்த்தமற்றது. மேலும், நாட்டின் இன்றைய பொருளாதார சூழலில் இத்தகையதொரு பாரிய கட்டடத்தை நிர்மாணிப்பது என்பது மத்திய அரசிற்கோ அல்லது மாகாண சபைக்கோ கடினமான காரியமாகும். அது மாத்திரமல்லாமல் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களுக்கு மிகவும் அண்மித்த பிரதேசமாக இது இருப்பதன் மூலம் இது ஒரு பிராந்திய பயிற்சி மையமாகவோ அல்லது வன்னி நிர்வாகங்களைக் கவனிக்கக் கூடிய மாகாண சபை நிர்வாகமாகவோ அது செயல்படுவதே சாலச்சிறந்தது.

எனவே ஆளுனர் அவர்கள் பொலிசாருக்கு அதனைக் கையளிக்க வேண்டும் என்ற உத்தரவைக் கைவிட்டு வன்னி மக்களின் நலன்கள் சார்ந்து சிந்திக்க வேண்டும் - என்று அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# உள்ளூராட்சி மன்றங்களுக்கு அதிகூடிய அதிகாரங்கள்!

## பிரதமர் தினேஷ் குணவர்த்தன

கொழும்பு, செப். 06

**உள்ளூராட்சி மன்றங்களுக்காக அதிகூடிய அதிகாரத்தை பெற்றுக் கொடுக்க ஆக்கபூர்வமான நடடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

கதிர்காமத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசமைப்பு, மறுசீரமைப்பு ஊடாக உயரிய சபையான பாராளுமன்றம் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அதிகூடிய அதிகாரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேநேரம் கலப்பு தேர்தல் முறைமை தயாரிக்கப்படும். வாழ்க்கை சுமை அதிகரித்துள்ள மக்களின் நலன்புரி விடயங்களுக்காக புதிய



உத்திகள் கையாளப்படும் - என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# குமார வெல்கமவின் கட்சியை திறந்து வைத்தார் சந்திரிகா!

கொழும்பு, செப். 06

"புதிய இலங்கை சுதந்திர கட்சி" என்ற புதிய கட்சியின் தலைமை அலுவலகத்தை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுத் திறந்து வைத்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் குமாரவெல்கமவின் புதிய இலங்கை சுதந்திர கட்சியின் தலைமை அலுவலகத்தையே முன்னாள் ஜனாதிபதி திறந்து வைத்துள்ளார்- இந்த தலைமை அலுவலகம் பத்தரமுல்லையில் அமைந்துள்ளது.

சமீபத்தில் தொலைக்காட்சி பேட்டியொன்றில் கருத்து தெரிவித்த குமார வெல்கம முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் மகளை அரசியலுக்கு கொண்டுவருவது குறித்து மிகுந்த ஆர்வத்துடன் உள்ளாரெனத் தெரிவித்திருந்தார்.

கடந்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் கீழ் போட்டியிட்ட குமாரவெல்கம பாராளுமன்றத்தில் சுயாதீன உறுப்பினராக செயல்படுகின்றார்.

அண்மையில், ஜனாதிபதியின் இடைக்கால வரவு - செலவு திட்டத்துக்கு ஆதர வாக இவர் வாக்களித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யூரியா உர விநியோகம் வெற்றிகரமாக நிறைவு

## விவசாய அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, செப். 06

இந்திய கடன் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட யூரியா உரத்தின் விநியோகத்தை அரசாங்கம் வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் 65,000 மெற்றிக் தொன் யூரியா உரத்தை இலங்கை பெற்றது. அதில் 44,000 மெற்றிக் தொன் கடந்த ஜூலை 9 ஆம் திகதி நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டது.

தொடர்ந்து 21,000 மெற்றிக் தொன் யூரியா கடந்த ஒகஸ்ட் 20ஆம் திகதி நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.(ஐ)

# பல்கலைக்கழக அனுமதிக்கு நேற்று முதல் விண்ணப்பம் ஏற்பு

கொழும்பு, செப். 06

2021 - 2022 கல்வி ஆண்டுகளுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை நேற்று ஆரம்பமானதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், மாணவர்கள் எதிர்வரும் 23ம் திகதி வரையில் இதற்காக விண்ணப்பிக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

2021-2022 கல்வியாண்டிற்காக 42 ஆயிரத்து 519 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெறவுள்ளனர்.

பல்கலைக்கழக பிரவேசத்துக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள மாணவர் கைநூல் தற்போது நூல் விற்பனை நிலையங்களுக்கு விநியோகிக்கப் பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட விற்பனை முகவர்களின் பெயர் பட்டியல் மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளன. இதற்காக பல்கலைக் கழக இணையத்தளத்தைப் பயன்படுத்த முடியும்.

ஏதேனும் பிரச்னைகள் இருக்குமாயின் 1919 அரசாங்க தகவல் கேந்திரத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# டெங்கு நோய் பரவல் அதிகரிக்கும் அபாயம்!

கொழும்பு, செப். 06

நாட்டில் நிலவும் மழையுடனான வானிலையால் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் அபாயம் உள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

குறிப்பாக, கொழும்பு, தெஹிவளை, பத்தரமுல்லை, கடுவெல, கொத்தட்டுவ, ஹோமாகம, மஹரகம மற்றும் எகொட உயன ஆகிய பிரதேசங்கள் டெங்கு பரவல் அபாய வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதனிடையே, நாட்டில் டெங்கு நோய் பரவும் அபாயம் காணப்படுகின்ற 7 மாவட்டங்களில் கடந்த வாரம் டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் டெங்கு நோய் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# பெற்றோல் ஒதுக்கீட்டை உயர்த்துக ஓட்டோ சாரதிகள் போராட்டம்!

கொழும்பு, செப். 06

தங்களுக்கு வழங்கப்படும் எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்குமாறு கோரி பல தொழில்சார் முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கங்கள் எரிசக்தி அமைச்சுக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது கோரிக்கைகளுக்கு தீர்வு காணும் வரை குறித்த இடத்தை விட்டு விலகப் போவதில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கியூ. ஆர். முறையின் கீழ் முச்சக்கரவண்டிக்கு வாராந்தம் 5 லீற்றர் பெற்றோல் வழங்கப்படுகிறது. இது போதாது என தொழில்சார் முச்சக்கர வண்டி சாரதிகள் சுட்டிக்காட்டியிருந்தனர். எனினும், எரிசக்தி அமைச்சு இதுவரையில் எரிபொருள் ஒதுக்கீட்டை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.

இதன்படி, தமக்கு வழங்கப்பட்டுள்ள எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்குமாறு கோரி தொழில்சார்ந்த முச்சக்கர வண்டி சாரதிகளின் பல சங்கங்களின் பிரதிநிதிகள் நேற்று காலை எரிசக்தி அமைச்சுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்தனர்.

இதேவேளை, நாட்டில் சில பகுதிகளில் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. அத்தோடு எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் சிலவற்றுக்கு முன்பாக நேற்றும் நீண்ட வரிசைகளை அவதானிக்க முடிந்தது. (ஐ)

# பொதுமனுக்கள் பற்றிய குழுவின் தலைவராக மீண்டும் ஜெகத் எம்.பி.!

கொழும்பு, செப். 06

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடருக்கான பொது மனுக்கள் பற்றிய குழுவின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் ஜெகத் புஷ்பகுமார மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

ஜெகத் புஷ்பகுமாரவின் பெயரை பாராளுமன்ற உறுப்பினர் பிரியங்கர ஜயரத்ன முன்மொழிந்ததுடன் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் வழிமொழிந்தார்.

அண்மையில் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற பொது மனுக்கள் பற்றிய குழுவின் முதலாவது கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஜெகத் புஷ்பகுமார ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரிலும் பொது மனுக்கள் பற்றிய குழுவின் தலைவராக செயல்பட்டார்.

பாராளுமன்றத்தின் 120 (1) ஆம் நிலையியல் கட்டளையின் பிரகாரம் பாராளுமன்ற தெரிவுக் குழுவால் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு அண்மையில் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

அதற்கமைய, இம்தியாஸ் பக்கீர் மாகார், பியங்கர ஜயரத்ன, திலிப் வெதஆரச்சி, வடிவேல்



சுரேஷ், ச. வியாழேந்திரன், அசோக்க பிரியந்த, அ. அரவிந்த் குமார், கீதா சமன்மலீ குமாரசிங்ஹ, பீ.வை.ஜீ. ரத்னசேக்கர, சாரதீ துஷ்மந்த, கோவிந்தன் கருணாகரம், ஜயந்த கெட்டகொட, மொஹமட் முஸம்மில், துஷாரா இந்துனில் அமரசேன, வேலு குமார், வருண லியனகே, யூ.கே. சுமித் உடுகும்புர, மாயாதுன்னை சிந்தக அமல், நிபுண ரணவக்க, காமினி வலேபொட, ராஜிகா விக்கிரமசிங்ஹ, எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான ஆகியோர் பொது மனுக்கள் பற்றிய குழுவின் ஏனைய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். (ஐ)

# சட்டவிரோத மணல் அகழ்வு டிராக்டர்களுடன் மூவர் கைது!

கிளிநொச்சி, செப். 06

பளை - அல்லிப்பளையில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட மூன்று உழவு இயந்திரங்களுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அல்லிப்பளையில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாக பளை பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து நேற்று அதிகாலை ஒரு மணியளவில் பொலிஸார் அப்பகுதியில் சுற்றி வளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள்



பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர் எனவும் மணல் ஏற்றிய நிலையில் உள்ள உழவு இயந்திரங்கள் நாளை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படும் என்றும் பளை பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# மாணவர்களை ஏற்றாத பேருந்துகள்! ஏ- 9 வீதியை மறித்துப் போராட்டம்!!

முல்லைத்தீவு, செப். 06

**பனிக்கன்குளம், கிழவன்குளம் கிராமங்களின் மாணவர்களை தொடர்ச்சியாக பேருந்துகள் ஏற்றாமையை கண்டித்தும் - இது விடயத்தில் நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தி நேற்று அந்தப் பகுதி மக்கள் ஏ-9 வீதியை வழிமறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் - பனிக்கன்குளம், கிழவன்குளம் உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த சுமார் 60இற்கும் மேற்பட்ட மாணவர்கள் மாங்குளம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று வருகின்றனர்.

இவர்களுக்கும் பாடசாலைக்கும் இடையில் சுமார் பத்து கிலோமீற்றர் இடைவெளி காணப்படுகிறது. இவர்கள் பாடசாலைக்கு செல்ல வேண்டிய ஏ -9 வீதியூடாக பல போக்குவரத்து சேவைகள் இடம்பெறுகின்றன. ஆனாலும், இந்த மாணவர்களுக்கான சேவையை வழங்குவதில் பேருந்து சாரதிகள், நடத்துநர்கள் சரியாக செயல்படுவதில்லை என்று மக்கள் தொடர்ச்சியாக குற்றம் சுமத்தி வருகின்றனர்.

பேருந்தை மறிக்கும் மாணவர்களை அரச, தனியார் பேருந்துகள் ஏற்றிச் செல்வதில்லை. இதனால், அவர்கள் பாடசாலைக்கு உரிய நேரத்தில் செல்ல முடியாத நிலைமை ஏற்படுகிறது. இதனால், பல சிரமங்களையும் அவர்கள் எதிர்நோக்கி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் தொடர்ச்சியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பலருக்கு தெரியப்படுத்தியும் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மேலும், பேருந்துகள் இங்குள்ள நிறுத்தங்களில் நிற்காததால் மாணவர்கள் மட்டுமின்றி பொதுமக்கள், வயோதிபர்கள், நோயாளர்கள் எனப் பலரும் பாதிப்புக்களை எதிர்நோக்கி வந்தனர்.

இந்நிலையில், தற்போது பரீட்சைகள் நடக்கும் நிலையில் நேற்று காலை 6.40 மணி முதல் மாணவர்கள் பேருந்துகளுக்காக காத்திருந்தனர். ஆனால், காலை 8 மணியை கடந்தும் அவர்களை பேருந்துகள் ஏற்றவில்லை. இதனால், கோபமடைந்த மக்கள் நேற்று ஏ-9 வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.



போராட்டத்தை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் நீதிமன்றம் ஊடாக நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தமையை தொடர்ந்து மக்கள் போராட்டத்தை கைவிட்டனர்.

எனினும், சுமார் ஒரு மணித்தியாலத்தின் பின்னர் போக்குவரத்து வழமைக்கு திரும்பியது. (ஐ)

# உதவித்தொகை பெறுவோருக்கும் கியூ. ஆர். முறை அறிமுகமாகும்!

கொழும்பு, செப். 06

நலன்புரி உதவித்தொகை பெறுபவர்களுக்கும் கியூ. ஆர். முறையை அறிமுகப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

நலன்புரி மானியப் பலன்களை வழங்குவதற்குத் தகுதியானவர்களைக் கண்டறியும் புதிய வேலைத்திட்டம் தொடர்பில் மக்களுக்குத் தெரிவிக்கும் வகையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு சமூக நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் பி. விஜயரத்ன இதனை தெரிவித்தார்.

இதன்படி, சமுர்த்தி, முதியோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் சிறுநீரக நோயாளர்கள் வாழ்வாதார உதவித்திட்டம் போன்ற நலத்திட்டங்களின் கீழ் பயன்பெறும் மக்கள் மற்றும் அந்த உதவித் தொகைகளுக்காக காத்திருப்போர் பட்டியலில் உள்ள குடும்ப உறுப்பினர்கள், தற்போதைய பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டு அரசின் நலன்களை எதிர்பார்க்கும் மக்களும் இந்த திட்டத்தின் உள்வாங்கப்படவுள்ளனர்.

இதன்படி, 39 இலட்சம் குடும்பங்கள் இந்தத் திட்டத்திற்கு விண்ணப்பிப்பார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த புதிய திட்டம் 6 அடிப்படை நடவடிக்கைகளின் கீழ் செயல்படுத்தப்படவுள்ளது - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப். 06

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டில் அவர், குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக நடத்தப்படும் வாராந்த சொற்பொழிவும் - மாதந்த நாயன்மார் குருபூஜை நிகழ்வு கனடாவின் ரொறன் ரோவில் வசிக்கும் சிவஸ்ரீ பால. திருகுணானந்தக் குருக்களின் அனுசரணையில் நடக்கிறது.

இந்த நிகழ்வின் வரிசையில், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் 37ஆவது சொற்பொழிவு தாவடி ஸ்ரீ ஆதிகாளி அம்மன் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில், "சைவ சமய மறுமலர்ச்சியின் தந்தை நாவலர்" எனும் தொனிப்பொருளில் சிவநெறிச்செம்மல் க.ஈஸ்வரன் சொற்பொழிவாற்றுவார். நிறைவில் வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கு பாராட்டு பரிசில்கள் வழங்கப்படும். (ஐ)

# அமெரிக்கா அன்பளித்த கப்பல் இலங்கை பயணத்தை தொடங்கியது!

கொழும்பு, செப். 06

அமெரிக்கா இலங்கைக்கு அன்பளிப்பு செய்த பி 627 ஆழ்கடல் ஊடுருவல் கப்பல் சியாட்டல் துறைமுகத்தில் இருந்து இலங்கைக்கான பயணத்தை ஆரம்பித்துள்ளது.

2021ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் அமெரிக்காவின் கரையோர பாதுகாப்புத் திணைக்களத்தால் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்ட இந்தக் கப்பல், கடற்படையின் செயல்பாட்டுத் தேவைக்கேற்ப நவீனப்படுத்தப்பட்டதன் பின்னர் கொழும்பு துறைமுகத்தை நோக்கி கடந்த 3ஆம் திகதி பயணத்தை ஆரம்பித்துள்ளதாக கடற்படை அறிவித்துள்ளது.

இந்த கப்பல் எதிர்வரும் நவம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் கொழும்பு துறைமுகத்தை வந்தடையவுள்ளது. (ஐ)

# 'ரத்துபஸ்வல' கொலை கலாசாரத்தை மீண்டும் உருவாக்குவதற்கு முயற்சி!

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 06

தற்போதைய அரசாங்கம் "ரத்துபஸ்வல" கொலை கலாசாரத்தை மீண்டும் உருவாக்குவதற்கு முயற்சிக்கின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கட்டானை தேர்தல் தொகுதி கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், நாட்டின் ஒட்டுமொத்த மக்களும் நிராகரித்த ராஜபக்ஷவினரை பாதுகாக்கும் பொறுப்பையும் அரசாங்கம் தற்போது ஏற்றுக்கொண்டுள்ளது. ராஜபக்ஷர்களை மீண்டும் அரசியலுக்குள் கொண்டு வருவதற்கான தரைவிரிப்பு விரிக்கப்படுகின்ற சூழ்நிலையில் மறுபுறத்தில் மக்களுக்கு மலர் வளையம் வைக்கப்படுகின்றது.

நாடு தற்போது இழந்து நிற்கும் நில உரிமையையும் பணத்தையும் ராஜபக்ஷ அரச குடும்பம் மீளப்பெற்றுத் தர வேண்டும் என்றே மக்கள் கோருகின்றனர். எனவே, மக்களின் குரல்களுக்கு செவிசாய்த்து மக்களின் பொது சொத்துக்கள் மற்றும் கொள்ளையடிக்கப்பட்ட அனைத்தையும் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழ் மீண்டும் நாட்டுக்கு கொண்டு வருவோம்.

எமது ஆட்சியின் கீழ், மோசடிகளுடன் தொடர்புடைய அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்தி தகுந்த தண்டனை வழங்கப்படும். ராஜபக்ஷவினர் ஆட்சியில் இல்லாவிட்டாலும்கூட தற்போதைய அரசாங்கம் ரத்துபஸ்வல கொலை கலாசாரத்தை மீண்டும் உருவாக்குவதற்கு முயற்சிக்கின்றது.

ஜனநாயகப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த இந்நாட்டு இளைஞர்கள், பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தி மிலேச்சத்தனமான முறையில் நசுக்கப்படுகின்றனர். இளைஞர்கள் மீதான அடக்குமுறையை எதிர்க்கட்சி என்ற வகையில் முழுமையாக நாம் எதிர்க்கின்றோம் - என்றார். (கே)

# ஜனநாயகம் என்ற போர்வையின் கீழ் படையினர் கேவலப்படுத்தப்படுகின்றனர்

## இப்படி கவலைப்படுகிறார் பாதுகாப்பு செயலர்

கொழும்பு, செப். 05

"ஜனநாயகம் என்ற போர்வையில் இளம் படையினரின் உன்னத சேவையை குழிதோண்டிப் புதைக்கும் கேவலமான காணொலி காட்சிகளை பரப்புவது வருத்தமளிக்கிறது."

இதேவேளை, "இலங்கை முன்னாள் படையினர் சங்கத்துக்கான முழுமையான நிரந்தர அலுவலகக் கட்டடத்தை பாதுகாப்பு தலைமையக வளாகத்துக்குள் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது", என்று பாதுகாப்பு செயலாளர் நாயகம் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

அதற்கமைவாக 17.5 பரப்புக் காணி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கு அரச நிதி பயன்படுத்தப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை முன்னாள் படையினர் சங்கத்தின் 78 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பாதுகாப்புச் செயலாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"சமீப காலங்களில் நாங்கள் நடைமுறைப்படுத்தியது போல், தற்போதைய ஜனாதிபதியின் வழிகாட்டலுடன் இலங்கை முன்னாள் படையினர் சங்கம் மற்றும் அதன் சேவைகளை வளப்படுத்தவும் நாங்கள் எதிர்பார்ப்பதாகவும் அவர் உறுதியளித்தார்.

சமீபத்திய போராட்டம் தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்,

"ஜனநாயகம் என்ற போர்வையில் இளம் படையினரின் உன்னத சேவையை குழிதோண்டிப் புதைக்கும் கேவலமான காணொலி காட்சிகளை பரப்புவது வருத்தமளிக்கிறது. முன்னாள் இராணுவத்தினர் நமது இளம் படையினரை தங்கள் கடமைகளைச் செய்து தாய் நாட்டைக் காக்க ஊக்குவிக்க வேண்டும்", என்றும் சொன்னார். (ஐ)

# மனைவியை கொன்றுவிட்டு கணவன் தப்பியோட்டம்

கொழும்பு, செப். 06

மனைவியின் கழுத்தை அறுத்து கணவனே படுகொலை செய்த சம்பவம் தம்புள்ளை பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் தம்புள்ளை, கொட்டவெல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

கொலையான பெண், வெளிநாட்டில் இருந்தார் என்றும் கடந்த ஓகஸ்ட் 31 ஆம் திகதி நாடு திரும்பிய அவர் தனது தாயாருடன் வசித்தார் எனவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில், மனைவியின் வீட்டுக்கு சென்ற கணவர் அவரை கழுத்தறுத்து கொன்றுவிட்டு தப்பிச் சென்றுள்ளார். இந்தக் கொலைக்கு குடும்பத் தகராறே காரணம் என்று கூறப்படுகின்றது.

உயிரிழந்தவர் தம்புள்ளை, கொட்டவெல பிரதேசத்தை சேர்ந்த 42 வயது நபர் ஆவார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை தம்புள்ளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ரிஷி சுனக் VS லிஸ் டிரஸ்: இந்திய வம்சாவளியை சேர்ந்தவர்

# ஏன் பிரிட்டன் பிரதமர் ஆக முடியவில்லை?

ஜூபைர் அஹமது



பிரிட்டனின் அடுத்த பிரதமர் ஆகவுள்ளார் கன்சர்வேட்டிவ் கட்சியின் லிஸ் டிரஸ். பிரதமர் போரிஸ் ஜான்சன் பதவி விலகுவதாக அறிவித்த பின் தங்கள் அடுத்த தலைவரை தேர்ந்தடுக்கும் பணிகளை கன்சர்வேட்டிவ் கட்சியினர் தொடங்கினர். அதில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக்கை வீழ்த்தி போட்டியில் வென்றுள்ளார் லிஸ்.

போரிஸ் ஜான்சனின் அமைச்சரவையில் பிரிட்டனின் நிதி அமைச்சராக ரிஷி சுனக்கின் திறமை பிரபலம் பெற்றிருந்தாலும், நாட்டின் அடுத்த பிரதமர் பதவிக்கான போட்டியில் அவருக்கு தோல்வி ஏற்பட்டுள்ளது. அவரது போட்டியாளரும் அந்நாட்டின் வெளியுறவு அமைச்சருமான லிஸ் டிரஸ், வாக்கெடுப்பில் அவரை விட மிகவும் முன்னிலை பெற்று புதிய பிரதமர் ஆகவுள்ளார்.

ரிஷி சுனக் இந்தப் போட்டியில் வெற்றி பெற்றிருந்தால் அது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தருணமாக இருந்திருக்கும். அவர் பிரிட்டனின் வெள்ளையர் இனம் அல்லாத முதல் பிரதமர் மற்றும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த முதல் பிரதமர் ஆகிய பெருமைகளைப் பெற்றிருப்பார்.

2008இல் பராக் ஒபாமா அமெரிக்காவின் முதல் கருப்பின ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டபோது உருவாக்கிய வரலாற்றுக்குச் சற்றும் குறைவில்லாமல் இருந்திருக்கும். அவருக்கு முன் பிரிட்டனில் தெற்காசியாவைச் சேர்ந்த பல தலைவர்கள் அமைச்சர்கள் மற்றும் மேயர் பதவிகளுக்கு வந்துள்ளனர்.

பிரீத்தி படேல் நாட்டின் உள்துறை அமைச்சராகவும் சாதிக் கான் லண்டன் மேயராகவும் இருந்துள்ளனர். ரிஷி சுனக் 2020ல் நிதியமைச்சராகப் பதவி உயர்த்தப்பட்டபோது அவரே நாட்டின் இரண்டாவது மிக முக்கியமான தலைவர் ஆனார். ஆனால் இது வரை சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த எவரும் பிரதமர் பதவிக்கு போட்டியிட்டதில்லை.

டாக்டர் நீலம் ரெய்னா, மிடில்செக்ஸ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக உள்ளார். அவர், “இந்த நாட்டின் நாடாளுமன்றத்தில் இந்தியாவை விட மத மற்றும் இனச் சிறுபான்மை சமூகங்கள் அதிக பிரதிநிதித்துவம் பெற்றுள்ளன. ஆனால் ரிஷி பிரதமர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால், அந்த வரலாறு, சிறப்புமிக்கதாக இருந்திருக்கும், ஏனெனில் அவர் வேறுபட்ட இன அடையாளத்தைக் கொண்டவர்,” என்றார்.



இங்கிலாந்துக்கு வெளியே, பல நாடுகளில், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தலைவர்களின் நீண்ட பட்டியலே உள்ளது. இந்த நாடுகளில் சில மொரிஷியஸ், கயானா, அயர்லாந்து, போர்ச்சுகல், ஃபிஜி ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

உலகில் 30க்கும் மேற்பட்ட நாடுகளில், ஒரு நாட்டில் இருந்து வேறொரு நாட்டுக்கு புலம்பெயர்ந்தோர், அவர்கள் குடியேறிய நாட்டை ஆளும் அல்லது ஆட்சி செய்த பெருமை இந்தியாவில் இருந்து குடியேறியவர்களைப் போல வேறு எந்த நாட்டுக்கும் இல்லை.

“அவரது தோலின் நிறம் காரணமாக இருக்கலாம்”

அந்த பட்டியலில் 42 வயதான ரிஷி சுனக்கின் பெயரையும் சேர்த்திருக்கலாம். ரிஷி நிதியமைச்சராக இருந்தபோது, கோவிட் தொற்றுநோயால் ஏற்பட்ட பொருளாதார பாதிப்பை வியக்கத்தக்க வகையில் கையாண்டு, மக்கள் மத்தியில் தனது நற்பெயரையும் பிரபலத்தையும் நிறுவினார்.

அவர் வெற்றி பெற்றிருந்தால், பிரித்தானிய சமூகம் பன்முகத்தன்மைக்கு சிறந்த உதாரணம் என்ற பரவலான பார்வையை வலுப்படுத்தியிருக்கும்.

ரிஷி சுனக் தன்னை ஒரு இந்து என்று கூறிக்கொண்டாலும், பொது வெளியில், பல்வேறு மதங்களின் சடங்குகளைப் பின்பற்றுகிறார். 2015ல் முதன்முறையாக நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, பகவத் கீதையின் மீது கைகளை வைத்து உறுதியேற்று பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

கன்சர்வேடிவ் கட்சியின் அமைப்பு இந்த அச்சத்தின் பின்னணியில் இருப்பதாகத் தோன்றியது. ரிஷி சுனக் மற்றும் லிஸ் டிரஸ் ஆகிய இருவரில் ஒருவரைத் தங்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்க, கட்சியின் 160,000-க்கும் அதிகமான உறுப்பினர்கள் வாக்களிக்க வேண்டியிருந்தது.

கட்சியின் உறுப்பினர்களில் கிட்டத்தட்ட 97 சதவீதம் பேர் வெள்ளையர்கள், 50 சதவீதத்துக்கும் அதிகமானோர் ஆண்கள். மொத்த உறுப்பினர்களில் 44 சதவீதம் பேர் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள். கட்சியின் இளைய தலைமுறையினர் ரிஷிக்கு ஆதரவாக இருப்பதாகத் தெரிகிறது.

ஆனால் மூத்த உறுப்பினர்கள் லிஸ் டிரஸ் பக்கம் சாய்ந்துள்ளனர். கடந்த மாதம், சில பழைய உறுப்பினர்கள் பிபிசி இந்தியா குழுவிடம், ரிஷியை அவர்கள் விரும்பினாலும், அவர்களின் வாக்கு லிஸ் டிரஸூக்குத் தான் என்றும் கூறினர்.

தேர்தல் முடிவு உணர்த்தியது என்ன?

வெள்ளையரல்லாத பிரதமரை தெரிவு செய்வதற்கு கன்சர்வேட்டிவ் கட்சி இன்னும் தயாராகவில்லை என்பதை இத்தேர்தல் முடிவு உணர்த்தியுள்ளதாக அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் அவரது தோல்விக்கு இனப் பின்னணி மட்டும் காரணமாக இருக்க முடியாது. லண்டனில் உள்ள பார்க்லேஸ் வங்கியின் மூத்த அதிகாரியான சஞ்சய் சக்சேனா, இரு தலைவர்களின் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டங்களைப் பார்த்துதான் கட்சி உறுப்பினர்கள் வாக்களித்திருக்க வேண்டும் என்று நம்புகிறார்.

ரிஷி சுனக் நிதி அமைச்சராக ஏப்ரல் மாதம் தேசிய காப்பீட்டு தொகையை அதிகரித்தார். இந்த உயர்வை திரும்பப் பெறுவதாக லிஸ் உறுதியளித்திருந்தார். அதிக வரிகள் “பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கும்” என்பது அவரது வாதம்.

ரிஷி சுனக்கின் வாக்குறுதி என்னவென்றால், “உடனடி நிவாரணம்“ வழங்குவதற்குப் பதிலாக முதலில் பொருளாதாரத்தை வலுப்படுத்துவேன், இதன் காரணமாக வரியை உடனடியாகக் குறைக்க முடியாது. பொய்யான வாக்குறுதிகளை அளித்து பொதுமக்களைத் தவறாக வழிநடத்த விரும்பவில்லை என்று ரிஷி சுனக் கூறினார். தோல்வியை ஏற்றுக்கொள்வேன் ஆனால் பொதுமக்களிடம் நேர்மையற்றவனாக இருக்க மாட்டேன் என்று பலமுறை கூறினார்.

பிரிட்டனின் பொதுவான நம்பிக்கை என்னவென்றால், ரிஷி சுனக் மிகவும் பணக்காரர் என்பதால், சாதாரண மக்களின் பிரச்னைகளைப் புரிந்து கொள்ள முடியாது என்பதுதான். சமீபத்திய கணக்கெடுப்பின்படி, அவர் பிரிட்டனில் உள்ள 250 பணக்காரர்களில் ஒருவர். ஆனால் அவர் பணக்காரராக பிறந்தாரா? இல்லை. அவர் சவுத்தாம்ப்டனில் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தார்.

அவரது தந்தை ஒரு மருத்துவர், தாய் ஒரு வேதியியலாளர். சிறுவயதில், அவர் சவுத்தாம்ப்டனில் உள்ள ஒரு கோவிலுக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார், அங்கு மக்களைச் சந்தித்த பிபிசியிடம், கல்வியில் அதிக முக்கியத்துவம் கொண்ட ஒரு எளிய குடும்பத்தில் இருந்து அவர் வந்ததாகவும் அவர் பணக்காரரானார் என்றால் அது அவருடைய கடின உழைப்பால்தான் என்றும் கருத்து கூறினர்.



# காயப்பட்ட தனியன் யானையிடம் தமிழர் தரப்பும் அகப்பட்டு விட்டதா?

**பனங்காட்டான்**

இராமாயணத்தில் முதல்நாள் போரில் ராமனிடம் தோற்ற இராவணன் நாடு திரும்புவதை கம்பசக்கரவர்த்தி "யாவும் அக்களத்தே விட்டு வெறுங்கையோடு இலங்கை புக்கான்" என்று வர்ணித்ததுக்கு ஒப்பாக கோட்டாபய நாடு திரும்பியதை பார்க்க முடிகிறது.

ஜனாதிபதி பதவியைச் சுமந்தவாறு இலங்கையை விட்டுத் தப்பியோடிய கோட்டாபய ராஜபக்ச மீண்டும் நாடு திரும்புவாரா, இல்லையா என்றிருந்த கேள்விக்கு முடிவு காணப்பட்டுள்ளது.

இலங்கையில் பிறந்து வாழ்ந்து, பிறப்புரிமைக்காகப் போராடிய மக்கள் குழுமத்தை கொடூர யுத்தத்தால் அழித்து, அதற்குப் பரிசாகக் கிடைத்த அரியாசனத்தில் அமர்ந்த கோட்டாபய, அந்நாட்டின் பிரஜை என்ற வகையில் இலங்கை திரும்பியது சட்டத்துக்குப் புறம்பான செயலன்று. அமெரிக்க இரட்டைப் பிரஜாவுரிமையை ரத்துச் செய்தவர் என்ற வகையில் அவர் எப்போதும் இலங்கை செல்லவும் வெளியேறவும் பூரண உரிமை உள்ளவர். அந்த வகையில் அவர் இலங்கை மீண்டிருப்பது முக்கியமான ஒன்றல்ல.

ஆனால், அவரது பெயரைப் பயன்படுத்தி அரசியல் பிழைப்பு நடத்த பல தரப்பினர் முயற்சிப்பதுதான் இன்றைய பேசுபொருள். தேசியப் பட்டியலூடாக முதலில் அவரை நாடாளுமன்ற உறுப்பினராக்குவது, பின்னர் பிரதமர் கதிரையில் அமர்த்துவது, அதன் பிறகு முடிந்தால் நாடாளுமன்ற பலத்தினூடாக ஜனாதிபதி ஆக்குவது என்று பலவகையான செய்திகள் அண்மையில் வெளிவந்தன.

கோட்டாபய ஏன், எதற்காக நாட்டைவிட்டுச் சென்றார் என்று தமக்குத் தெரியாது என்று கூறிய மகிந்த, மீண்டும் அரசியலில் வருவது பற்றி கோட்டாபயதான் முடிவெடுக்க வேண்டுமென்றும் சொல்லி வந்தார். இதனையே மகிந்தவின் புதல்வரான நாமலும் கூறுகிறார். ஆனால், பசில் ராஜபக்ச மட்டும் கோட்டாவை மீண்டும் பதவி அரசியலுக்குள் இழுத்துவர துடிக்கிறார்.

பொதுஜன பெரமுனவை மீளெழுச்சி கொள்ளச் செய்ய கோட்டாவின் பெயர் இப்போது ராஜபக்சக்களுக்கு தேவைப்படுகிறது என்பதை இவர்களின் அறிவிப்புகளினூடாகப் பார்க்கலாம்.

கடந்த பொதுத்தேர்தலில் பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டு 150க்கும் அதிகமான ஆசனங்களைப் பெற்றது. ராஜபக்சக்கள் அனைவரும் அமைச்சர்கள் ஆயினர். அறுபத்தொன்பது லட்சம் சிங்கள வாக்குகளால் ஜனாதிபதியாகி நாட்டையே குட்டிச் சுவராக்கிய கோட்டாபயவினால் அந்தக் குடும்பத்தில் எல்லோரும் பதவி இழந்தனர். இதனை மறந்துவிட்டே இப்போது கோதபாயவை வைத்து அரசியல் நடத்த இவர்கள் எத்தனிக்கிறார்கள்.

தங்களின் எதிர்காலம் பற்றிய இவர்களின் அச்சம் காரணமாக எழும் அவலக் குரலாகவே இவைகளைப் பார்க்க வேண்டியுள்ளது. இந்த அச்சத்தின் மூலநாயகராக ரணில் விக்கிரமசிங்க அமைந்துள்ளார்.

பெரமுனவின் தலைமையிலான கூட்டிலிருந்து விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார தலைமையிலான கட்சிக்காரர்கள் பிரிந்து சென்றதால் பெரமுனவின் எண்ணிக்கை 140க்கும் குறைந்தது.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பெரமுனவின் அக்கிராசனரான ஜி.எல்.பீரிஸ், மக்கள் சக்திக் கட்சியின் தலைவர் சஜித் பிரேம தாசவுடன் இணைந்து போட்ட திட்டத்தினால் டலஸ் அழகப்பெரும போட்டிக்கு இறக்கப்பட்டார். இவருக்குக் கிடைத்த தோல்வியை அடுத்து இவ்விருவர் உட்பட 13 பேர் (இங்கும் 13தான்) தனிக்குழுவாக சுயேட்சை அணி என்ற பெயரில் மாறியுள்ளனர். இதனால் பெரமுனவின் பலம் 120 வரைக்கு இறங்கியுள்ளதை ரணிலின் முதலாவது வரவு செலவுத்திட்ட வாக்களிப்பில் உணர முடிந்தது.



இவ்வாறு வெளியேறிய 13 பேரையும் தங்களுடன் இணைப்பதற்கு விமல் வீரவன்ச தரப்பும், சஜித் பிரேமதாச தரப்பும் முயன்று வருகின்றது. இது தவிச்ச முயல் அடிக்கும் அரசியல் அணுகுமுறை.



எப்போதும் தம்மை ஒரு கிங்மேக்கர் என்ற நிலைப்பில் அரசியல் செய்து பழகிய ஜி.எல்.பீரிஸ், எந்தத் தலைமையின் கீழும் செயற்பட விரும்பமாட்டார். முடிந்தால் மேலும் சில பெரமுனகாரர்களை வெளியே இழுத்து, தமது தலைமையில் புதிய பெரமுன ஒன்றை உருவாக்க எத்தனிப்பார்.

இந்தப் பின்னணியில் தங்களது பெரமுனவுக்கு ஏற்படக்கூடிய ஆபத்தை உணர்ந்த மகிந்த - பசில் சகோதரர்கள், கோட்டா பெயரை முன்னிறுத்தி அரசியல் எதிர்காலத்தை நோக்குகின்றனர்.

பசிலின் இலக்கு ரணிலை ஜனாதிபதி பதவியிலிருந்து கூடிய விரைவில் அகற்றுவது. மகிந்தவின் இலக்கு எவ்வகையிலாவது தமது புதல்வர் நாமலை என்றோ ஒரு நாள் ஜனாதிபதி கதிரையில் அமர்த்துவது. எதிரும்புதிருமான இலக்குகளுடன் இவர்கள் காய்களை நகர்த்தினாலும், இப்போதைக்கு ஒன்றுபட்டே இயங்க வேண்டிய தலைவிதி.

இவைகளுக் கப்பால், ரணில் தமது தனித்துவத்தைப் பேணியவாறு அரசியல் செய்கிறார். அண்மையில் எதிரணி எம்.பி. ஒருவர் ரணிலை விமர்சனம் செய்கையில், 'இவர் ஒரு தனியன் யானை - இவரால் எதையுமே செய்ய முடியாது; என்று வரிணித்திருந்தார். யானையை சின்னமாகக் கொண்ட ஐக்கிய தேசிய கட்சியில் ரணில் மட்டுமே எம்.பி.யாக இருப்பதைக் குறித்து முன்வைக்கப்பட்ட கருத்து இது.

யானைகளின் சாம்ராஜ்யம் பற்றி வன விலங்குகள் திணைக்களத்தினர் நன்கு அறிந்து வைத்துள்ளனர். மிருகங்களில் பலமானவை யானைகள். இவை எப்போதும் கூட்டமாகவே செல்பவை. தங்கள் பாதுகாப்புக் கருதி இவ்வாறு செல்வது வழக்கம். ஆனால், இதற்கு மாறாக தனியன் யானை ஒன்று கூட்டத்துடன் சேராது தனித்தே திரியும்.

**யானைகள் பொதுவாக கூட்டமாகவே திரிபவை. நீண்டகால ஆயுளும் அதீத ஞாபகசக்தியும் இவைகளின் வரம். ஆனால், இவைகளுள் தனியன் யானை என்றும் ஒன்று உண்டு. தனக்கு காயத்தை உண்டு பண்ணியவர்களை ஞாபகத்தில் வைத்து சந்தர்ப்பம் வரும்போது அவர்களைப் பழிவாங்குவதே இதன் இலக்கு. ஒற்றை மனிதர் ஒருவர் காரணமாக தமிழர் தேசிய கூட்டமைப்பு தனியன் யானையின் வலைக்குள் அகப்பட்டு விட்டதுபோல் தெரிகிறது.**



ஏற்கனவே ஏதாவது தாக்குதலுக்கு உள்ளாகி காயப்பட்டு அல்லது சூடுபட்டு சற்று ஊனமானதாக இந்த யானை இருக்கும். சிலவேளை ஒரு காலை இழுத்துச் செல்வதையும் காண முடியும். தம்மைத் தாக்கிய எவரையோ அது தேடிக் கொண்டிருப்பதை அறியலாம். அந்த யானை எப்போதும் தனித்தே திரியும். அதனால் அதனை தனியன் யானை என்பர். அதனைக் காணும்போது பொதுவாக எல்லோரும் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள ஒளித்துக் கொள்வர்.

இந்தப் பத்தியாளரின் பார்வையில், ரணில் அவ்வாறான ஒரு தனியன் யானை. 45 வருட அரசியல் பாதையில் பல தடவை காயப்பட்டவர். ஊனப்பட்டவரும்கூட. உயர்ந்த இடத்தில் இருக்கும்போது இழுத்து வீழ்த்தப்பட்டவர். சில சந்தர்ப்பங்களில் பின்கதவால் தள்ளப்பட்டவரும்கூட.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் பெறாமகன் என்றவகையில் அவரது ஆட்சிக்காலத்தில் (1977-1989) அவரது சுவீகாரப் பிள்ளையாகவும், அரசியல் வாரிசாகவும் பல அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டு வளர்க்கப்பட்டவர். 1989ல் பிரேமதாச ஜனாதிபதியாகியபோது பிரதமர் பதவி ரணிலுக்கென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், பிரேமதாச அவரைப் புறக்கணித்துவிட்டு சப்பாணி அரசியல்வாதியான முன்னாள் தபால் அமைச்சர் டி.பி. விஜேதுங்கவை பிரதமராக நியமித்தார்.

பிரேமதாசவின் அகால மரணத்தின் பின்னர் ஜனாதிபதியான டி.பி.விஜேதுங்க பிரதமர் பதவியை ரணிலுக்கு வழங்கி, ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கான தமது நன்றிக்கடனை நிறைவு செய்தார்.

சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தபோது பொதுத்தேர்தல் மூலம் பிரதமர் பதவிக்கு வந்த ரணிலின் தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அரசை கலைத்து ரணிலின் பிரதமர் பதவியையும் பறித்தார்.

நல்லாட்சி அரசின் ஜனாதிபதியாக அமைந்த மைத்திரிபால சிறிசேன, தம்மை அந்தப் பதவிக்குக் கொண்டு வந்தவர் ரணில் என்பதையும் மறந்து அவரைப் பிரதமர் பதவியிலிருந்து நீக்கி மகிந்தவுக்கு அப்பதவியை வழங்கினார். நீதிமன்றத் தீர்ப்பின்படி 52 நாட்களின் பின்னர் அப்பதவி மீளவும் ரணிலுக்குக் கிடைத்தது.

இவை, ரணில் தமது அரசியல் வாழ்வில் பெற்ற சில அவமானங்களும் சவால்களும். இவ்வகையான காயங்களுக்குள்ளான தனியன் யானை இப்போது அந்தக் காயங்களுக்கு பரிகாரம் தேடும் பாதையில் பல பழிவாங்கல்களை ஆரம்பித்துள்ளது.

தேசிய நீரோட்டத்திலுள்ள சகல கட்சிகளையும் கூறுபோட்டு அவைகளை குழுக்களாக்கி வருகிறது. அக்கட்சிகளிலுள்ள சிலரை இழுத்தெடுத்து அமைச்சர் பதவிகளும் வழங்கப்படுகிறது. இந்த சூழ்ச்சி வலைப்பின்னலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் சிக்குண்டு விட்டது.

நல்லாட்சிக் காலத்தில் ரணிலின் உற்ற தோழராக இருந்தவர் எம்.ஏ.சுமந்திரன். ஆனால், இப்போது ஏதோ காரணத்தால் சுமந்திரன் ரணிலை பகிரங்கமாக எதிர்த்து வருகிறார். அறிக்கைகள் ஊடாக சாடி வருகிறார். ரணில் அவரது தாய்மொழியான சிங்களத்தில் கடிதங்களில் ஒப்பமிடுவதையும் சுமந்திரன் நையாண்டி பண்ணுகிறார்.

இதுதான் தருணமென்று பார்த்து சுமந்திரனை வெட்டி விளையாட, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவுடன் தமது தொடர்பாடலை ரணில் ஆரம்பித்துள்ளார். செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் ரெலோவின் மூவர் குழுவினர் சில நாட்களுக்கு முன்னர் ரணிலை சந்தித்தது ஊடகங்களில் படமாகியுள்ளது.

ரெலோவினர் ரணிலிடம் முன்வைத்துள்ள அத்தனை கோரிக்கைகளும் தமிழரின் சமகால சில முக்கிய பிரச்சனைகள். தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, காணாமலாக்கப்பட்டோருக்கான தீர்வு, தமிழர் தரப்பிலிருந்து ராணுவத்தை குறைப்பது, காணி அபகரிப்பை நிறுத்துவது, ஜெனிவா தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது என்று பல இதில் அடங்கியுள்ளன. இவற்றுள் சிலவற்றை நடைமுறைப்படுத்த ரணில் இணங்கியிருப்பதாக ரெலோ அறிவித்துள்ளது.

சுமந்திரனை பதப்படுத்த, கூட்டமைப்பை பிளவுபடுத்த, தமிழரைச் சாந்தப்படுத்த ரணில் மேற்கொண்டிருக்கும் அரசியல் சாமர்த்தியத்தின் ஆரம்பமாக இதனைப் பார்க்கலாம்.

சமகாலத்தில், எதிர்கால அரசியலுக்கு நாமலுக்குப் போட்டியாக யானைத் தரப்பிலிருந்து தமது வாரிசு ஒருவரை முன்னிலைப்படுத்தும் ரணிலின் சாணக்கியமும் ஆரம்பமாகியுள்ளது. அடுத்து வரும் பத்திகளில் இதனைப் பார்ப்போம்.

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

06) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

i) நான் ......................................... (ஆவணி, ஆவனி) மாதம் பிறந்தேன்.

ii) தேசியக்கொடியில் .................................... (வால், வாழ், வாள்) ஏந்திய சிங்கம் ஒன்று உண்டு.

ii) நாங்கள் .................................................... (சுற்றுலா, சுற்றுளா, சுற்றுழா) விற்காகக் கண்டிக்குச் சென்றோம்.

(3 புள்ளிகள்)

07) பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.

i) ஆற்றிலே போட்டாலும் ........................................................................

ii) ..................................................... குறுகுறுக்கும். (2 புள்ளிகள்)

08) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.

i) பலா கன்று போல பயிர் : ............................................................

ii) தென்னை ஓலை போல மூங்கில் : .................................................... (2 புள்ளிகள்)

09) பின்வரும் வாக்கியத்திற்குரிய இரட்டைக்கிளவியை இட்டு பூரணப்படுத்துக.

i) தம்பி தண்ணீரை ............................... (கட கட, மட மட) வெனக் குடித்தான்.

ii) காலையில் சூரியன் ................................ (தகதக, குளுகுளு) வென பிரகாசித்தது.

(2 புள்ளிகள்)

10) தனிச்சொல்லை எழுதுக.


i) வீண் செலவு செய்பவன் : ............................................................


ii) விமானத்தைச் செலுத்துபவன் : .................................................... (2 புள்ளிகள்)

11) கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

i) Bread: ........................... ii) Cloud: ............................ (2 புள்ளிகள்)

12) தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.

i)  ................................

ii)  ................................

(2 புள்ளிகள்)

13) பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.

i) do / like? / What / you: ............................................................................

ii) old / How / you? / are: ........................................................................ (2 புள்ளிகள்)

14) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

i) ரோஹல : ...........................................................

ii) தொளஹ : ......................................................... (02 புள்ளிகள்)

15) பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

i) சோறு சாப்பிடுங்கள் : .......................................................................................

ii) அங்கே பாருங்கள் : ....................................................................................... (02 புள்ளிகள்)

❖ விடை எழுதுக.

16) 7 8 3 0 இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

..............................................................

17) ஏழாயிரத்து முந்நூற்று ஒன்பது என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.

.............................................................................

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 06. | 1) ஆவணி | 2) வாள் | 3) சுற்றுலா |
| 07. | 1) அளவறிந்து போடு | 2) குற்றமுள்ள நெஞ்சு | |
| 08. | 1) நாற்று | 2) தாள் | |
| 09. | 1) மடமட | 2) தக தக | |
| 10. | 1) ஊதாரி | 2) விமானி / வலவன் | |
| 11. | 1) பாண் | 2) முகில் | |
| 12. | 1) Star | 2) Table | |
| 13. | 1) What do you like? | 2) How old are you? | |
| 14. | 1) வைத்தியசாலை | 2) பன்னிரண்டு | |
| 15. | 1) பத் கன்ன | 2) எத்தன பலன்ன / எஹே பலன்ன /அத்தன பலன்ன | |
| 16. | 8 730 | 17. 7 309 | |

## கல்வி tv CHANNEL-1

06.09.2022 செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2

06.09.2022 செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



# விளையாட்டு கழகத்துக்கு பாதணிகள்

அம்பாறை, செப். 06

அம்பாறை மாவட்டம் அட்டப்பளம் பகுதியை சேர்ந்த ஜொலி ஸ்டார் விளையாட்டு கழகத்தினருக்கு ஒரு தொகுதி பாதணிகள் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை இணைந்த கரங்களின் அனுசரனையின் ஊடாக ஜொலி ஸ்டார் விளையாட்டு பெறுமதி வாய்ந்த பாதணிகள் முத்துக்கறி உணவக உரிமையாளர் லக்சனின் ஏற்பாட்டில் வழங்கப்பட்டன.

இதன் போது இணைந்த கரங்களின் இணைப்பாளர்களான லோ.கஜரூபன் சங்கீத் தஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய இணைப்பாளர் லோ.கஜரூபன் எதிர்காலத்தில் விளையாட்டுக்கள் ஊடாக இனங்களுக்கிடையிலான பிணைப்புகள் வளர வேண்டும்.பக்குவம் நம்பிக்கை என்பன கட்டியெழுப்பப்படுவதன் ஊடாக போதையற்ற உலகை விளையாட்டு வீரர்களினால் உருவாக்க முடியும் என குறிப்பிட்டார். (அ)

# வடக்கையும், கிழக்கையும் இணைத்து இடைக்கால நிர்வாகம் கேட்பது பிழை

## ஐக்கிய காங்கிரஸ் கட்சி கூறுகிறது

அம்பாறை, செப். 06

**வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்து இடைக்கால கட்டமைப்பை ஏற்படுத்திக் கொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது அழுத்தத்தை ஒருமித்த குரலில் கொடுக்க வேண்டுமென ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் , கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள கோரிக்கையை அவர் மீள் பரிசீலனை செய்யவேண்டும் என ஐக்கிய காங்கிரஸ் கட்சித் தலைவர் கலாநிதி முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.**

கல்முனையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சர் டக்லஸ் தேவானந்தா என்பவர் நாம் மிகவும் மதிப்பும் மரியாதையும் வைத்துள்ள, இனவாதம் இல்லாத தமிழ் தலைவர். அந்த வகையில் வடக்கையும் கிழக்கையும் இணைத்து இடைக்கால நிர்வாகம் கேட்பதானது பிழையானதாகும்.

வடக்குக்கு வேறாகவும் கிழக்குக்கு வேறாகவும் தனித்தனியான இடைக்கால நிர்வாகத்தை அமைச்சர் டக்லஸ் தேவானந்தா முன் வைத்திருக்க வேண்டும். அதுதான் நிலையான தீர்வாகும்.

சந்திரிக்கா ஆட்சிக்காலத்திலும் இவ்வாறு வடக்கையும் கிழக்கையும் பிரித்து புலிகளிடம் இடைக்கால நிர்வாகம் கொடுக்க முயற்சி எடுத்ததும் அதனை கிழக்கு முஸ்லிம் சமூகம் கடுமையாக எதிர்த்ததையும் நாம் மறந்து விடக்கூடாது.

வடக்கில் புலிகள் தனக்கே சுதந்திரமாக அரசியல் செய்ய முடியாமல் இருந்த டக்கஸ் தேவாவுக்கு, இன்னமும் அவரை தமிழ் கூட்டமைப்பினர் ஒரு தலைவராக ஏற்காத நிலையில் வடக்கு கிழக்கு இணைந்த இடைக்கால நிர்வாகத்தில் முஸ்லிம்கள் நிம்மதியாக, சுதந்திரமாக வாழ முடியுமா என கேட்கிறோம்.

ஆகவே இது விடயத்தை அமைச்சர் டக்லஸ் தேவானந்தா மீள் பரிசீலனை செய்வதுடன் வடக்கும் கிழக்குக்கும் தனித்தனியான இடைக்கால நிர்வாக கோரிக்கையை முன் வைப்பதே சாத்தியமானதாகும் என்பதை ஐக்கிய காங்கிரஸ் கட்சி (உலமா கட்சி) அவரிடம் கேட்டுக்கொள்கிறது- என்றார். (அ)

# 10 கோடி ரூபா செலவில் கிழக்கில் பாடசாலை கட்டடம் திறந்துவைப்பு



மட்டக்களப்பில், செப். 06

மட்டக்களப்பு மத்தி வலயத்திற்குட்பட்ட காத்தான்குடி கல்விக்கோட்டத்தின் மீரா பாலிஹா மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட மூன்று மாடி கட்டிடம் நேற் றுக் காலை திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை முதல்வர் யூ. எல். மன்சூர் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் பிரதம அதிதியாக பங்கேற்று கட்டடத்தை திறந்து வைத்தார்.

நிகழ்வில் மட்டக்களப்பு மத்தி வலயக்கல்விப்பணிப்பாளர் கலாநிதி எஸ்.எம்.எம்.எஸ். உமர் மௌலானா காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.எம். அஸ்பர் உள்ளிட்ட கல்வி அதிகாரிகள் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து சிறப்பித்தனர்.

இதன் போது கடந்த வருடம் க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் சகல துறைகளிலும் உயர் சித்தி அடைந்த மாணவிகள் கௌரவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு வழிகாட்டிய ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வின் போது கட்டடத்தினை அமைப்பதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கிய முன்னாள் அமைச்சர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் பாடசாலை சமூகத்தினரால் பொன்னாடை போர்த்தி கொளரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வீதி விபத்துகளை தடுக்கும் வகையில் மாணவர்களுக்கு விசேட விழிப்பூட்டல்

அம்பாறை, செப். 06

வீதி விபத்துக்களை தடுக்கும் முகமாக மாணவர்களுக்கு விசேட விழிப்பூட்டல் நடவடிக்கை வீதி விதிமுறைகள் தொடர்பில் பாடசாலை மாணவர்களுக்கு தெளிவூட்டும் விழிப்புணர்வு நிகழ்வு ஒன்றினை கல்முனை தலைமையக பொலிஸார் முன்னெடுத்தனர்.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 156 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு நேற்று அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் வழிகாட்டலில் குறித்த நிகழ்வு இடம் பெற்றதுடன் பிரதம விருந்தினர்களாக அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டீ.ஜே.ரத்னாயக்க கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இதன்போது வீதி ஒழுங்கு தொடர்பில் மாணவர்களுக்கான கருத்தரங்குகள் நடாத்தபட்டு சான்றிதழ்களும் அதிதிகளால் வழங்கப்பட்டது.

மேலும் வீதி விதிமுறைகள் தொடர்பில் பாடசாலை மாணவர்களுக்கு தெளிவூட்டும் விழிப்புணர்வினை பொலிஸார் மேற்கொண்டிருந்தனர். நாளைய இளைஞர்கள் இன்றைய மாணவர்கள் எனும் ரீதியில் மாணவர்களுக்கு வீதி ஒழுக்குகள் இவிதிமுறைகள் தொடர்பில் தெளிவூட்டும் விழிப்புணர்வு பயற்சிகள் கருத்தரங்குகளை பாடசாலை மட்டத்தில் மேற்கொண்டு வருகின்றோம். அதனால் பாடசாலை மாணவர்கள் வீதி ஒழுங்கு விதிமுறைகளை அறிந்து கொள்வதன் ஊடாக வீதி விபத்துகளை தடுக்க முடியும் என கல்முனை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி நிஹால் சிறிவர்த்தன தெரிவித்தார்.

இந் நிகழ்வில் கல்முனை கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலை அதிபர் அருட்சகோதரர் சந்தியாகு, கல்முனை உவெஸ்லி தேசிய பாடசாலை அதிபர் எஸ்.கலையரசன், ஆசிரியர்கள், பொலீஸ் பிரிவினர் சிவில் பாதுகாப்புக் குழுவினர் மாணவர்கள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (அ)

# மரண அறிவித்தல்



**தாயின் மடியில்**
**1950.03.02**

**இறைவனடியில்**
**2022.09.05**

## அமரர் நாகேசு கந்தசாமி

மானிப்பாய் வடகிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் நாகேசு கந்தசாமி நேற்று (05.09.2022) திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நாகேசு சிவக்கொழுந்து தம்பதியரின் பாசமிகு தவப் புதல்வனும் கந்தையா செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் தங்கமலரின் (மனோகரி) அன்புக் கணவரும் தாட்சாயினி (ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி), நிசாந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான தங்கமலர், தங்கராணி, மனோன்மணி, சந்திரராணி, தெய்வேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், தியாகராசா, நாகலிங்கம் மற்றும் இரத்தினம் சந்திராதேவி, காலஞ்சென்ற அருந்ததி, தங்கராசா, அரியமணி, காந்திமலர், மகேந்திரராசா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 07.09.2022 புதன்கிழமை மு.ப. 8.30 மணியளவில் மானிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.30 மணியளவில் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: **077 684 5842**
**077 745 7685**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# பிரிட்டன் புதிய பிரதமராக லிஸ் டிரஸ் தேர்வானார்!

## மூன்றாவது பெண் பிரதமராக இன்று பதவியேற்கிறார்

லண்டன், செப். 06

பிரித்தானியாவின் புதிய பிரதமராகவும் கன்சர்வேடிவ் கட்சியின் புதிய தலைவராகவும் லிஸ் டிரஸ் உத்தியோகபூர்வமாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ட்ரஸ் 81,000 இற்கு மேல் வாக்குகளைப் பெற்றார். லிஸ் டிரஸின் கடும் போட்டியாளரான சுனக் 60,000க்கு மேல் வாக்குகளை பெற்றுள்ளார்.

சுனக்கின் 60,399 (43%) வாக்குகளுடன் ஒப்பிடுகையில், டிரஸ் 81,326 (57%) வாக்குகளைப் பெற்றார். 82.6 வீத வாக்குப்பதிவு நடந்ததாக கூறப்படுகின்றது.

வெற்றியின் பின், லிஸ் டிரஸ் வாக்காளர்களுக்கு அளித்த வாக்குறுதிகளைப் பின்பற்றுவதாக உறுதியளித்தார். அடுத்த இரண்டு ஆண்டுகளில் அதை வழங்க முடியும் என்பதை கன்சர்வேடிவ் கட்சி காட்ட வேண்டும் என்று கூறினார்.

வரிகளை குறைத்து பிரித்தானிய பொருளாதாரத்தை வளர்க்க தன்னிடம் ஒரு தைரியமான திட்டம் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

47 வயதான லிஸ் டிரஸ் புதிய பிரதமராக தேர்வு செய்யப்பட்டுள்ளதன் மூலம், மார்கிரெட் தட்சர், தெரேசா மேயுக்கு அடுத்ததாக மூன்றாவது பெண் பிரதமர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

இன்று அவர் தனது பிரித்தானிய அரசாங்கத்தை அமைப்பதற்கான அழைப்புக்காக பால்மோரலில் உள்ள ராணியை சந்திக்கும்போது அவர் பிரதமராக பதவியேற்பார்.

லிஸ் டிரஸை அவரது அடுத்த வருங்கால எதிர்ப்பாளரான தொழிற்கட்சி தலைவர் சர் கீர் ஸ்டார்மர் வாழ்த்தியுள்ளார்.

பொறிஸ் ஜோன்சன் 2019இல் தனது தலைமைப் போட்டியில் 66.4 சதவீத வாக்குகளுடன் வெற்றி பெற்றார். டேவிட் கேமரூன் 2005இல் 67.6 சதவீதம் மற்றும் இயன் டங்கன் ஸ்மித் 2001இல் 60.7 சதவீத வாக்குகளுடன் வெற்றி பெற்றார்.



இதற்கிடையே, தற்போதைய பிரதமர் பொரிஸ் ஜோன்சன் தனது வேலையின் இறுதி நாளுக்காக டவுனிங் வீதிக்கு வந்தடைந்தார்.

அவர் கடந்த 2019ஆம் ஆண்டு 1,139 நாட்களுக்கு முன்பு பதவியேற்றார். கொரோனா விதிகளை மீறியதாக எழுந்த குற்றச்சாட்டின் நெருங்கடிக்கு மத்தியில் அவர் தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்தார்.

இன்று ஜோன்சன் மற்றும் கன்சர்வேடிவ் கட்சியின் புதிய தலைவர் இருவரும் அதிகாரத்தை, அதிகார பூர்வமாக ஒப்படைப்பதற்காக ராணியை சந்திக்க ஸ்கொட்லாந்தில் உள்ள பால்மோரலுக்கு செல்வார்கள்.

பின்னணி

பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சன் தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்ததை தொடர்ந்து, புதிய பிரதமரை தேர்வு செய்வதற்கான தேர்தலை ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி நடத்தியது.

பல்வேறு கட்டங்களாக நடந்த வாக்கெடுப்பில் முன்னாள் திறைசேரியின் தலைவர் ரிஷி சுனக் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் லிஸ் ட்ரஸ் ஆகிய இருவரும் இறுதி வேட்பாளர்களாக தேர்வாகினர்.

அவர்களில் ஒருவரை கட்சியின் தலைவராகவும், பிரதமராகவும் தேர்வு செய்வதற்கு கன்சர்வேட்டிவ் கட்சி உறுப்பினர்கள் தபால் மூலமும், ஒன்லைன் மூலமாகவும் வாக்களித்தனர். இந்த வாக்குப்பதிவு செப்டம்பர் 2ஆம் திகதியுடன் முடிவடைந்தது.

புதிய பிரதமரை தேர்ந்தெடுப்பதற்கான இறுதிச் சுற்றில் பழமைவாத கட்சியில் (கன்சர்வேடிவ்) மொத்தமுள்ள இரண்டு இலட்சம் உறுப்பினர்களும் தங்கள் வாக்குகளை பதிவு செய்யதனர்.

இந்த வாக்குகள் எண்ணப்பட்டு அதிக வாக்குகளை பெற்ற லிஸ் ட்ரஸ் இன்று வெற்றியாளராக அறிவிக்கப்பட்டார். அவர் இன்று செவ்வாய்க்கிழமை பிரதமராக பதவியேற்பார்.

உக்ரைனில் ரஷ்யாவின் போரின் பின்னணியில் எரிசக்தி விலைகள் உயர்வு, தலைமுறைகளில் மிக மோசமான வாழ்க்கைச் செலவு நெருக்கடி என பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியில் லிஸ் ட்ரஸ் பதவியேற்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கையின் நிலை எங்களுக்கு ஏற்படாது

## பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா

டாக்கா, செப். 05



இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி போன்றதொரு சூழலை தமது நாடு எதிர்கொள்ளாது என பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா தெரிவித்துள்ளார்.

கோவிட், உக்ரைன் - ரஷ்யா போர் உள்ளிட்ட காரணங்களால் பங்களாதேஷின் அந்நிய செலாவணி கையிருப்பு வீழ்ச்சி அடைந்துவருகிறது. அத்துடன், அதிகரித்து வரும் இறக்குமதிச் செலவுகளுக்கு மத்தியில் சர்வதேச நிதி நிறுவனங்களிடம் பங்களாதேஷ் அரசு கடனுதவி கோரியுள்ளது.

இந்நிலையில் நேற்று திங்களன்று தனது இந்திய பயணத்துக்கு முன்னதாக ஏ.என்.ஐக்கு அளித்த பேட்டியில், கோவிட்-19 மற்றும் ரஷ்யா-உக்ரைன் போரின் தாக்கம் இருந்தபோதிலும் பங்களாதேஷின் பொருளாதாரம் வலுவாக இருப்பதாக ஹசீனா கூறினார்.

பங்களாதேஷின் உலகில் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நாடுகளில் ஒன்றாகும். ஆனால் இறக்குமதி செலவீனங்களின் அதிகரிப்பு காரணமாக அந்நாட்டின் அந்நிய செலாவணி இருப்பு குறைந்து வருகிறது. இதனால் சர்வதேச நாணய நிதியம் உட்பட சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற அரசாங்கம் முயன்று வருகிறது.

எங்கள் கடன் விகிதம் மிகவும் குறைவாக உள்ளது. அத்துடன் எங்கள் கடனை சரியான நேரத்தில் திருப்பிச் செலுத்த நாங்கள் தவறவில்லை.

எனவே, இலங்கையில் ஏற்பட்டது போன்றதொரு மிகப் பெரிய பொருளாதார நெருக்கடி எங்களுக்கு ஏற்படாது. பங்களாதேஷ் இலங்கை போன்று நெருக்கடியில் சிக்கலாம் என சிலர் முன்வைக்கும் கருத்துக்கள் தவறானவை. அது நடக்காது என்பதை என்னால் உறுதிப்படுத்த முடியும் எனவும் எனவும் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா தெரிவித்துள்ளார். (அ)

# கனடாவைக் கலக்கியுள்ள கத்தி வெட்டு சம்பவங்கள்!

## இரட்டையர்கள் வெறியாட்டம்!!!

மொன்றியல், செப். 06

கனடாவின் மத்தியில் அமெரிக்க எல்லையோரமாக அமைந்துள்ள சஸ்காட்ச்செவன் மாகாணத்தில் ஞாயிறு இடம்பெற்றிருக்கும் கொடூர தாக்குதல் சம்பவங்கள் முழு நாட்டையுமே உலுக்கியிருக்கின்றன. கார் ஒன்றில் வந்த இருவர் கிராமங்களில் பரவலாகப் பல இடங்களில் எதிர்ப்பட்டவர்களை வெட்டித் தாக்கி வெறியாட்டம் புரிந்துள்ளனர். தாக்குதல் நடந்த கிராமங்களில் ஒன்று கனடாவின் பூர்வீக குடிகள் வசிக்கின்ற பகுதி ஆகும். உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களின் படி பத்துப் பேர் உயிரிழந்துள்ளனர். 15 பேர் காயங்களுடன் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.




மாகாணத்தின் இரு கிராமங்களில் 13 க்கும் மேற்பட்ட இடங்களில் தாக்குதல்கள் நடந்துள்ளன. ஆபத்தான இரண்டு நபர்கள் பரவலாக மக்களை இலக்கு வைத்து கத்தி மற்றும் ஆயுதங்களால் பெரும் வெறியாட்டம் நடத்தியுள்ளனர் என்று கனடா பொலிஸ் தெரிவித்திருக்கிறது.

ஆயுதங்களோடு தலைமறைவாகியுள்ள இருவரையும் தேடிப் பிடிப்பதற்காக தாக்குதல் நடந்த பகுதிகள் முழுவதும் அவசர கால நிலைஅறிவிக்கப்பட்டிருக்கிறது. வீதிகளில் சோதனை நிலைகளை அமைத்துப் பயணிகள் சோதனையிடப்பட்டு வருகின்றனர்.

றோயல் கனெடியன் பொலீஸ் வெளியிட்டுள்ள தகவலின்படி30,31 வயதுகள் உடைய டாமியன் சாண்டர்சன் மற்றும் மைல்ஸ் சாண்டர்சன் என்ற பெயர்களையுடைய இருவரே தாக்குதல்களை நடத்திப் பொதுமக்களைக் கொன்றுள்ளனர். இருவரும் சகோதரர்களா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

தாக்குதல் தொடர்பான முதல் தொலைபேசி அழைப்பு ஞாயிறு காலை 05.45 மணிக்கு தங்களுக்குக் கிடைத்தது என்றும் தொடர்ந்து வேறு பல இடங்களில் இருந்தும் அவசர உதவி கோரும் அழைப்புகள் வரத் தொடங்கின எனவும் பொலீஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கனடாவில் நடந்திருக்கின்ற மிகப் பெரும் வன்முறைச் சம்பவமாகப் பதிவாகியிருக்கின்ற இந்தத் தாக்குதல்கள் குறித்துப் பிரதமர் யஸ்ரின் ரூடோ தனது அதிர்ச்சியையும் மன வேதனையையும் வெளியிட்டுள்ளார். (அ)

# ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கம்

காபூல், செப். 06

ஆப்கானிஸ்தானில் சக்தி வாய்ந்த நிலநடுக்கமொன்று ஏற்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளது.

இந்த நில அதிர்வானது 5.3 என்ற ரிச்டர் அளவில் பதிவாகியுள்ளதாக அந்நாட்டு தேசிய நிலநடுக்க அறிவியல் மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தின் காரணமாக 9 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 9 பேர் காயமடைந்துள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

காபூல், குனார், லக்மன், நகர்ஹர் பகுதிகளில் குறித்த நில அதிர்வு தாக்கம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# தூக்கிலிடப்பட்ட நிரபராதி!

## 70 ஆண்டுகளுக்கு பிறகு வெளிவந்த உண்மை



லண்டன், செப். 06

கொலைக் குற்றத்திற்காக தவறாக குற்றம் சாட்டப்பட்டு 70 ஆண்டுகளுக்கு முன்பு பிரிட்டிஷ் சிறையில் தூக்கிலிடப்பட்ட நபரின் குடும்பத்தினரிடம், நீதி தவறியதற்காக இங்கிலாந்து பொலிஸ் மன்னிப்புக் கோரியுள்ளது.

1952ஆம் ஆண்டில் கார்டிப் நகரத்தில் ஆடை வியாபாரியான லில்லி வொல்பேட் என்ற பெண்ணை கொலை செய்ததற்காக, மஹ்மூத் மட்டான் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார்.

மட்டான் குற்றம் புரியவில்லை என்று நிரூபிக்க அவருடைய மனைவியும், மகன்களும் கடந்த 46 ஆண்டுகளாக போராடி வந்துள்ளனர். ஆனால், அவர்கள் யாரும் இப்போது உயிருடன் இல்லை.

இந்நிலையில், நீதி தாமதமாகவே கிடைத்துள்ளதாக மட்டானின் பேத்தி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

ஈழநாடு



# பாகிஸ்தானிடம் வீழ்ந்தது இந்தியா!




டுபாய், செப். 06

இந்திய கிரிக்கெட் அணிக்கு எதிரான இருபது - 20 போட்டியில் பாகிஸ்தான் அணி 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. இந்த போட்டி இறுதி ஓவர் வரை பரபரப்பாக சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

டுபாய் கிரிக்கெட் மைதானத்தில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகள் நடப்பு ஆசிய கோப்பை தொடரின் சுப்பர் 4 சுற்றில் விளையாடின. இந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது. 182 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை பாகிஸ்தான் விரட்டியது.

அந்த அணிக்காக அணித் தலைவர் பாபர் அஸாம் மற்றும் முகமது ரிஸ்வான் ஆகியோர் தொடக்க ஆட்டக்காரர்களாக களம் இறங்கினர். அந்த அணிக்கு வலுவான தொடக்கம் தேவைப்பட்டது. இருந்தும் பாபர் 14 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பக்கர் ஷமான் 15 ஓட்டங்களில் விக்கெட்டை இழந்தார்.

அதன்பிறகு வந்த முகமது நவாஸ் உடன் இணைந்து இந்திய பந்துவீச்சை அதிரடியாக ஆடினார் ரிஸ்வான். இருவரும் 73 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றனர். நவாஸ், 20 பந்துகளில் 42 ஓட்டங்கள் எடுத்தார். ரிஸ்வான் 51 பந்துகளில் 71 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். ஆசிப் அலி, 8 பந்துகளில் 16 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார்.

19.5 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 182 ஓட்டங்களை எடுத்தது பாகிஸ்தான். இதன் மூலம் அந்த அணி 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஹார்திக் பாண்ட்யா மற்றும் சஹால் என இருவரும் 4 ஓவர்கள் வீசி 40 ஓட்டங்களுக்கு மேல் ஓட்டங்களை கொடுத்திருந்தனர். புவனேஷ்வர், 40 ஓட்டங்கள் கொடுத்திருந்தார்.

18ஆவது ஓவரில் இந்திய வீரர் அர்ஷ்தீப் ஒரு பிடியெடுப்பு வாய்ப்பை நழுவ விட்டிருந்தார். அந்த பிடியெடுப்பே ஆட்டத்தின் முடிவில் சிறிய அளவில் மாற்றம் ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, இந்திய அணிக்காக, அதன் தலைவர் ரோஹித் சர்மா மற்றும் கே. எல். ராகுல் ஆகியோர் தொடக்க ஆட்டக்காரர்களாக களம் இறங்கினர்.

இருவரும் முதல் விக்கெட்டுக்கு 54 ஓட்டங்களை சேர்த்தனர். பவர் பிளே ஓவர்களில் இருவரும் சிறப்பாக ஓட்டங்களை சேர்த்தனர். 16 பந்துகளில் 28 ஓட்டங்களை எடுத்து விக்கெட்டை இழந்தார் ரோஹித். தொடர்ந்து களத்துக்கு கோலி வந்தார். மறுமுனையில் ராகுல் 20 பந்துகளில் 28 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். சூர்யகுமார் யாதவ் 13 ஓட்டங்களில் விக்கெட்டை இழந்தார். பின்னர் வந்த ரிஷப் மற்றும் ஹார்திக் பாண்டியா ஆகியோர் அடுத்தடுத்து விக்கெட்களை இழந்தனர். தீபக் ஹூடா, 16 ஓட்டங்கள் எடுத்த நிலையில் வெளியேறினார்.

44 பந்துகளில் 60 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார் கோலி. 20 ஓவர்கள் முடிவில் இந்திய அணி 7 விக்கெட்கள் இழப்புக்கு 181 ஓட்டங்களை எடுத்தது.

பாகிஸ்தானின் பந்துவீச்சில் ஷதாப் கான், 2 விக்கெட்களை கைப்பற்றி இருந்தார். நசீம் ஷா, முகமது ஹன்சைன், ஹரிஸ் ராஃப், முகமது நவாஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றி இருந்தனர். (ஐ)




## ரோஹித்திடமிருந்த சாதனையை மீண்டும் பறித்தார் விராட் கோலி!

டுபாய், செப். 06

பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் இந்தியாவின் விராட் கோலி 60 ஓட்டங்களை குவித்தார். இந்த அரைச்சதத்தின் மூலம், சர்வதேச இருபது - 20 போட்டியில் அதிக அரைச்சதம் அடித்தவர்கள் பட்டியலில் மீண்டும் முதலிடத்தை பிடித்துள்ளார்.

இந்திய அணி வீரர்கள் ரோஹித் சர்மா மற்றும் விராட் கோலி இருபது - 20 போட்டிகளில் அரைச்சதம் மற்றும் அதிக ஓட்டங்கள் பட்டியலில் மாறி மாறி முதல் இடத்தை பிடித்து வருகின்றனர்.

இருபது - 20 போட்டியில் அதிக அரைச்சதம் அடித்தவர்கள் பட்டியலில், விராட் கோலி (32), ரோஹித் சர்மா (31), பாபர் அஸாம் (27) ஆகியோர் முதல் 3 இடங்களை பிடித்துள்ளனர்.

இதேபோல அதிக ஓட்டங்கள் எடுத்தவர்கள் பட்டியலில் ரோஹித் சர்மா (3,548) ஓட்டங்களுடன் முதல் இடத்திலும், 2ஆவது மற்றும் 3ஆவது இடங்களில் முறையே குப்தில் (3,497), விராட் கோலி (3,462) ஓட்டங்களுடன் உள்ளனர். (ஐ)




## அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் மெட்வதேவ் அதிர்ச்சி தோல்வி

நியூயோர்க், செப். 06

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸின் நடப்பு சம்பியனான ரஷ்யாவின் மெட்வதேவ் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார்.

கிராண்ட்ஸ்லம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது.

இதில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடப்பு சம்பியனும், தர வரிசையில் முதல் இடத்தில் இருப்பவருமான டேனில் மெட்வதேவ் (ரஷ்யா) 4வது சுற்றில் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார்.

அவுஸ்திரேலியாவை நிக் கிர்கியோஸ் 7-6 (13-11), 3-6, 6-3, 6-2 என்ற செற் கணக்கில் மெட்வதேவை வீழ்த்தி காலிறுதிக்கு தகுதி பெற்றார். 23-வது வரிசையில் உள்ள அவர் காலிறுதியில் ரஷ்யாவை சேர்ந்த கரென் கச்சனோவை எதிர்கொள்கிறார். (ஐ)




## அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் ஸ்வியாரெக் அபார வெற்றி!

நியூயோர்க், செப். 06

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸின் நான்காவது சுற்றுக்கு உலகின் முதல்நிலை வீராங்கனை இகா ஸ்வியாடெக், பெட்ரா கிவிட்டோவா, ஜெஸிக்கா பெகுலா உள்ளிட்டோர் முன்னேறினர்.

கிராண்ட்ஸ்லம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது.

இதில் பெண்கள் பிரிவில், அமெரிக்காவின் ஜெஸிக்கா பெகுலா 6-2, 6-7, 6-0 என சீனாவின் யுவான் யுயியை வீழ்த்தினார்.

பெட்ரா குவிட்டோவா 5-7, 6-3, 7-6 என கடுமையாகப் போராடி முகுருஸாவை வீழ்த்தினார்.

உலகின் முதல்நிலை வீராங்கனை இகா ஸ்வியாரெக் 6-3, 6-4 என அமெரிக்காவின் லாரன் டேவிஸை வீழ்த்தினார்.

# எமது புதிய கூட்டணியில் அனைவரும் இணையுங்கள்!

## உதய கம்மன்பில அழைப்பு

கொழும்பு, செப். 06

"எமது நாடு பற்றி எரிந்து கொண்டிருக்கின்றது. அந்தத் தீயை அணைக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது. எனவே, எமது புதிய அரசியல் கூட்டணியில் இணையுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றோம்." - இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

விமல் வீரவன்ஸ தலைமையிலான "மேலவை இலங்கை கூட்டணி"யின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

மேலும், "உலகம் முழுவதும் கையேந்துவதே கொள்கை திட்டமாக உள்ளது. நாட்டை மீட்பதற்கான திட்டம் ஆளும் கட்சியிடமோ அல்லது எதிர்க்கட்சியிடமோ இல்லை. அதனால் தான் புதிய கூட்டணியை உருவாக்கியுள்ளோம்.

அழுத்தக் குழுவாக நாம் செயல்படுவோம். பிரச்னைகளை பற்றி பேசுவதில் பயன் இல்லை, தீர்வுகளை பற்றி கதைக்கவே இந்தக் கூட்டணி.

சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டவர், சர்க்கரை பழக்கத்தை கைவிடாமல், அதனை தொடர்ச்சியாக சாப்பிட்டால் என்ன நடக்கும்? அதுபோலவே கடன் பொறிக்குள் இருந்து மீள்வதற்காக மீண்டும் மீண்டும் கடன் வாங்கும் நடவடிக்கையையே ஆட்சியாளர்கள் முன்னெடுத்து வருகின்றனர்" - என்றார். (ஐ)

# கோட்டாபயவை கைது செய்யுமாறு எவரும் அழுத்தம் கொடுக்கமுடியாது!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க



**கொழும்பு, செப். 06**

**முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பியமைக்கு எதிராக எவரும் குரல் எழுப்ப முடியாது. அவரை கைது செய்யுமாறும் எவரும் அழுத்தம் கொடுக்கவும் முடியாது."**

**- இவ்வாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது: -

"கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி பதவியிலிருந்து விலகி வீடு செல்லுமாறே ஆர்ப்பாட்டக்காரர்கள் அன்று கோரினர். அவரை நாட்டைவிட்டு வெளியேறுமாறோ அல்லது வெளிநாட்டில் தங்குமாறோ எவரும் கோரவில்லை.

அவருக்கென சொந்த நாடு இருக்கும்போது அவர் ஏன் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும்? எமது கோரிக்கையின் பிரகாரம் அவர் நாடு திரும்பியுள்ளார்.

அவருக்கு முன்னாள் ஜனாதிபதிக்குரிய அனைத்துச் சலுகைகளையும் எமது அரசாங்கம் வழங்குகின் றது. அவர் இந்நாட்டில் சுதந்திரமாக நடமாட முடியும். போதிய பாதுகாப்பு வசதிகளையும் அவருக்கு அரசாங்கம் வழங்கும்.

மீண்டும் அரசியலுக்கு வர அவர் இணக்கம் தெரிவித்தால் அவரை முதலில் தேசியப்பட்டியல் ஊடாக பாராளுமன்ற உறுப்பினராக்குவோம். மக்களின் அமோக ஆணை பெற்று ஜனாதிபதியாகப் பதவி வகித்த கோட்டாபய ராஜபக்ஷவை அரசாங்கம் என்ற ரீதியில் நாம் ஒருபோதும் கைவிடமாட்டோம்" - என்றார். (ஐ)

# புதிய அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்தி நாட்டை மீட்போம்!

## விமல் வீரவன்ஸ கூறுகிறார்

கொழும்பு, செப். 06

"குடும்ப ஆட்சியின் பின்னால் அணி திரண்டதுபோதும், பாரம்பரிய அரசியல் கலாசாரம் முடிவுக்கு வரட்டும். புதியதோர் அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்தி நாட்டை மீட்கவே "மேலவை இலங்கை கூட்டணி' உதயமாகியுள்ளது."

- இவ்வாறு 'மேலவை இலங்கை கூட்டணி' மற்றும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"இலங்கை என்பது ராஜபக்ஷக்களுக்கோ அல்லது பண்டாரநாயக்கக்களுக்கோ எழுதி வைக்கப்பட்ட சொத்து அல்ல. அது மக்களுக்கானது. ஆட்சியும் மக்களுக்கு உரியதாகவே இருக்க வேண்டும். ஆனால், கடந்த காலங்களில் மக்கள் ஆணைக்கு புறம்பாக நடவடிக்கைகள் இடம்பெற்றன. அமைச்சரவையில் இருந்து நாம் சுட்டிக்காட்டினோம். அதன் பலனாக வெளியேற்றப்பட்டோம்.

வாக்குகள் பெற்று ஆட்சிபீடம் ஏறும்வரைதான் பங்காளிக் கட்சிகள் வேண்டும். இந்த அரசியல் கலாசாரத்துக்கு முடிவு கட்ட வேண்டும்.

எமது கூட்டணியில் பெரிய கட்சி, சிறிய கட்சி இணைந்தால்கூட சம அந்தஸ்தே வழங்கப்படும். பாரம்பரியக் கூட்டணிக் கலாசாரத்துக்கு முடிவு கட்ட வேண்டும். நாட்டுக்காக, மக்களுக்காக புதியதொரு கூட்டணி அரசியல் கலாசாரத்தை நாம் உருவாக்கியுள்ளோம். இதிலுள்ள தலைவர்கள், மதிநுட்பத்துடன் செயல்படக்கூடியவர்கள்.

இதேவேளை, ஐரோப்பாவிடமிருந்த பலம் ஆசியா பக்கம் சாய்கின்றது. எனவே, தேசிய ரீதியில் மட்டுமல்ல ஆசிய சக்திகளுடன் நிற்கும் வகையிலும் எமது நடவடிக்கை அமையும்" - என்றார். (ஐ)

# மாடியிலிருந்து தவறிவீழ்ந்து பலி!

கொழும்பு, செப். 06

வெள்ளவத்தையில் 11ஆவது மாடியிலிருந்து தவறிவீழ்ந்து ஒருவர் உயிரிழந்தார்.

கொழும்பு வெள்ளவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாயா மாவத்தையில் 12 மாடி கட்டிடத்தின் 11ஆவது மாடியில் யன்னலை சுத்தம் செய்யும் போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் கிருலப்பனை பகுதியைச் சேர்ந்த 46 வயது நபர் என்று தெரிய வருகின்றது.

சம்பவம் தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# நெல் கொள்வனவுக்கான நிதி பற்றாக்குறை இல்லை!

கொழும்பு, செப். 06

நெல்லை கொள்வனவு செய்வதில் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு நிதிப் பற்றாக்குறை இல்லை என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த சில தினங்களில் இவ்வாறான பிரச்னைகள் இருந்து வந்தன. தற்போது அவை தீர்க்கப்பட்டுள்ளன.

ஆகக்கூடிய விலைக்கு விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்யும் ஆற்றல் தற்போது நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு உண்டு என்று விவசாய அமைச்சுதெரிவித்துள்ளது. (ஐ)

# விசேட அதிரடிப்படை சோதனை; 9 குற்ற சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, செப். 06

நாடளாவிய ரீதியில் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்புகளில் பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று, பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு பிலியந்தலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கெஸ்பேவ பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட மூன்று சுற்றிவளைப்புகளில் 718 கிராம் கேரள கஞ்சாவுடன் மூவர் கைதுசெய்யப்பட்டனர்.

குருளுபெத்தை மற்றும் ஹொரணை ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 27, 28 மற்றும் 32 வயது நபர்கள் மூவரே இவ்வாறு கைதாகினர்.

குருநாகல் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மூன்று சுற்றிவளைப்புகளில் 3 கிராம் 590 மில்லிகிராம் ஹெரோயினுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வாரியபொல, கலன்பிந்துனுவெள மற்றும் குடாகல்கமுவ ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 26, 27, 32 வயதுகளையுடைய மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புத்தளம் ஹம்பகமுவையில் அரை ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்ட கஞ்சா சேனை முற்றுகையிடப்பட்டது. இதன்போது 10,000 கஞ்சா செடிகள் கைப்பற்றப்பட்டன. அத்துடன், சந்தேக நபரொருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 33 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். கைப்பற்றப்பட்ட கஞ்சா செடிகள் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளன.

அநுராதபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்வல பிரதேசத்தில் அனுமதிப்பத்திரமின்றி லொறியொன்றில் கொண்டு செல்லப்பட்ட ஒரு தொகை தேக்கு மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதன்போது இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (கே)

# நடுத்தர மக்கள் அதிகம் உழைத்து குறைவாக உண்ண வேண்டும்!

## இதுவே அரசின் கொள்கை என்கிறார் வாசுதேவ

கொழும்பு, செப். 06

நடுத்தர மக்கள் அதிகமாக உழைக்க வேண்டும். ஆனால், குறைந்தளவில் உண்ண வேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கையாக உள்ளது. சிறந்த அரசியல் மாற்றத்துக்கு நாட்டு மக்களின் ஆசிர்வாதம், ஒத்துழைப்பு அவசியம். சவால்களை வெற்றிகொண்டு முன்னோக்கி செல்ல நாட்டு மக்கள் எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மேலவை இலங்கை கூட்டணியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

மஹரகவில் உள்ள தேசிய இளைஞர் மன்றத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற மேலவை இலங்கை கூட்டணியின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், பொருளாதார நெருக்கடி, பணவீக்கம் ஆகியவற்றின் வரைவிலக்கணத்தை துறைசார் நிபுணர்கள் அறிந்திருந்தார்கள். ஆனால், தற்போது சாதாரண மக்களும் பொருளாதார நெருக்கடி, பணவீக்கம் ஆகியவற்றின் வரைவிலக்கணத்தை அனுபவ ரீதியில் விளங்கிக்கொண்டுள்ளார்கள்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் நிறைவேற்றப்பட்ட இடைக்கால வரவு செலவு திட்டத்தின் ஊடாக வரி வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. தவறான பொருளாதார முகாமைத்துவ கொள்கையால் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ளது அதன் தாக்கம் நடுத்தர மக்கள்மீது மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டுமாயின் அனைவரும் அர்ப்பணிக்க வேண்டும் என குறிப்பிடப்படுகிறது. வரி செலுத்தலில் நடுத்தர மக்கள் மீது செலுத்தப்படும் அவதானம் முதலாளித்துவ வர்க்கத்தின் மீது செலுத்தப்படுவதில்லை. நாட்டு மக்கள் சமமான முறையில் மதிக்கப்பட வேண்டும்.

அபிவிருத்தியின் இயந்திரமாகக் கருதப்படும் முதலாளித்துவ வர்க்கத்தின் மீது அரசாங்கம் வரியை அதிகரிக்கவில்லை. பொருளாதார நெருக்கடியை நடுத்தர மக்கள் மாத்திரம் சுமக்க வேண்டியது நியாயமற்றதாகும். நடுத்தர மக்கள் அதிகமாக உழைக்க வேண்டும் ஆனால், குறைந்தளவில் உண்ண வேண்டும் என அரசாங்கம் குறிப்பிடுகிறது - என்றார். (ஐ)

## சிறுபான்மை...

அத்துடன், சிறுவர்களை தொழிலுக்கு அமர்த்துவதை முடிவுக்கு கொண்டு வருவதற்கான சட்ட மற்றும் ஏனைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆனாலும், இந்த சட்டமீறல்கள் மோசமான வடிவத்தில் இன்னமும் தொடர்கின்றன.

சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படாத சுதந்திர வர்த்தக வலயம் என்ற எண்ணக்கரு வரவேற்கப்படவேண்டியது. என்ற போதிலும் அது ஒரு மாவட்டத்துக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாகவும் ஏனைய பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படாததாகவும் காணப்படுகின்றது.

வீடுகளிலும் விவசாய மற்றும் சர்வதேச சுற்றுலாத்துறை உட்பட விருந்தோம்பல் சுத்தம் செய்தல் சேவை தொழில்துறை கைத்தொழில்துறை போன்றவற்றில் சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவது தொடர்கின்றது.

இவ்வாறான சில நடவடிக்கைகளை ஆபத்தானவை என வர்ணிக்கலாம். சுற்றுலாத்துறையில் சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படுகின்றனர். நாடு கொரோனா பெருந்தொற்றிலிருந்து மீண்டு சுற்றுலாத்துறை புத்துயிர் பெறும் சூழ்நிலையில் இது கரிசனைக்குரிய விடயமாக காணப்படுகின்றது.

இலங்கை தமிழர்கள், மலையக தமிழர்கள் போன்ற இன சிறுபான்மையினர் வசிக்கும் வறுமை நிலவும் கிராமப்பகுதிகளில் சிறுவர்கள் வேலைக்கு செல்வது அதிகமாக காணப்படுகின்றது. இந்த பகுதிகளில் சிறுவர்கள் குறிப்பாக மாணவிகள் தங்கள் குடும்பத்தை பராமரிப்பதற்காக பாடசாலை கல்வியை இடைநடுவில் கைவிடுகின்றனர்.

பெருந்தோட்டத் துறையில் மாணவர்கள் பாடசாலை கல்வியை கைவிடும் ஆபத்து அதிகமாக உள்ளது. ( இதற்கு தரம்குறைந்த கல்வி மற்றும் கல்வி வசதிகளும் காரணம்) மேலும், பெருந்தோட்ட துறையில் காணப்படும் குறைந்த சம்பளம் (1,000 ரூபாய்) சிறுவர்கள் வேலைக்கு செல்லும் ஆபத்தை அதிகரிக்கின்றது. குடும்பங்களுக்கு மேலதிக வருமானம் தேவைப்படுவதே இதற்கு காரணம்.

சட்ட அடிப்படையில் பார்த்தால் பெருந்தோட்ட தொழில்துறையில் சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதில்லை. எனினும், மலையகத்தில் வாழும் சிறுவர்கள் தங்கள் குடும்பத்தின் குறைந்த வருமானம் காரணமாக உணவகங்களிலும் ஏனைய உள்ளூர் தொழில் துறைகளிலும் வேலைபார்க்கின்றனர்.

இலங்கையில் நுண்கடன் திட்டங்கள் ஏற்கனவே பலவீனமான நிலையில் உள்ள குடும்பங்களை குறிப்பாக குடும்ப பொறுப்பை சுமக்கும் தாய்மார்களை மேலும் கடனுக்குள் சிக்கவைத்துள்ளன. இதனால், கடனை திருப்பி செலுத்துவதற்கு வேறு வழியில்லாததால் சிறுவர்கள் வேலைக்கு செல்லவேண்டிய நிலை காணப்படுகின்றது.

கோவிட் தொற்று பரவலால் 18 மாதங்களாக பாடசாலைகள் மூடப்பட்டமையால் வேலைக்கு செல்லும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன. கிராமப்புற மாணவர்கள் இணைய வழி கல்வியை பெறுவதில் பிரச்சினைகளை எதிர்கொண்டனர். இதன் காரணமாகவும் சிறுவர்கள் வேலைக்கு செல்வது அதிகரித்தது. அவ்வாறு சென்ற மாணவர்களை மீளவும் கற்றலுக்கு அழைக்கும் பணி வெற்றிகரமாக நிறைவேறவில்லை - என்றும் கூறியுள்ளார். (ஐ)

## வெளிநாட்டு...

அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையுடன் மோதலை விரும்பவில்லை. ஆனால், நாட்டின்மீது கட்டாயப்படுத்தப்படும் - அரசமைப்புக்கு விரோதமான நடவடிக்கைகளை எதிர்ப்போம் - என்றும் கூறினார்.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத் தொடர் வரும் 12ஆம் திகதி ஜெனிவாவில் தொடங்குகிறது. இந்தக் கூட்டத் தொடரில் பங்கேற்கும் அரச குழுவுக்கு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமை தாங்குகிறார். அவர் தலைமையிலான குழு நேற்று ஜெனிவா புறப்பட்டது. முன்னதாக, அவர் நேற்று செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தினார். அதிலேயே மேற்கண்டவாறு அவர் கூறினார்.

எப்படியிருப்பினும், போரின்போது இடம்பெற்றவை எனக் கூறப்படும் மனித உரிமைகள் மீறல்கள் சம்பந்தமாக குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் இராணுவ தளபதி சவேந்திர சில்வா உட்பட பல உயர் இராணுவ அதிகாரிகள் அமெரிக்காவுக்குள் நுழைய ஏற்கனவே தடை விதிக்கப்பட்டுள்ளது. இதே குற்றச்சாட்டுக்களின் பேரில் சில இராணுவ தளபதிகளுக்கு ஐரோப்பா, கனடா உட்பட பல மேற்கத்தைய நாடுகள் தடை விதித்துள்ளன. இந்த குற்றச்சாட்டுக்கள் நியாயமற்றவை, குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தங்களை தற்காத்துக்கொள்ள வாய்ப்பு வழங்கப்படவில்லை.

மேலும், இந்த நாட்டின் நீண்டகால மோதலால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து தரப்பினரின் பிரச்சனைகள் அல்லது குறைகளுக்கு ஒரு முழுமையான தீர்வு அல்லது நிரந்தர தீர்வை நாங்கள் வழங்க எதிர்பார்க்கிறோம் - என்றும் சொன்னார். (ஐ)

## இந்தியா...

ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சந்திம விக்கிரமசிங்க தலைமையிலான இந்தக் குழுவில் குடிவரவு - குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம், வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள், பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் நீதி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

போர் காலத்தில் இந்தியாவுக்கு அகதிகளாக இடம்பெயர்ந்த இலங்கையர்களை மீண்டும் அழைத்து வர வேண்டும் என "ஈழ அகதிகள் புனர் வாழ்விற்கான அமைப்பு" வேண்டுகோள் விடுத்திருந்தது.

இதுகுறித்து பேசுவதற்காக, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏகநாயக்க தலைமையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் இதற்கான தீர்மானம் எட்டப்பட்டது.

இந்தியாவின் தமிழக மாநிலத்தில் தற்போது சுமார் 58 ஆயிரம் இலங்கையர்கள் அகதிகளாக தங்கியுள்ளனர். இவர்களில் 3,800 பேர் மாத்திரமே இலங்கைக்கு திரும்புவதற்கு தயாராக இருக்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் இலங்கை வருவதை இலகுபடுத்துவதற்காக இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஜெனிவா...

மேலும், நாங்கள் அரச தூதுக்குழுவாக ஜெனிவா செல்லும்போது ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளரை சந்தித்து கலந்துரையாட எதிர்பார்ப்பதுடன் அரசாங்கத்தின் கொள்கையை அவருக்கு எடுத்துரைப்போம்.

வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கை மக்கள் சகல தரப்பினருடனும் இணைந்து இலங்கையின் பொறுப்புக்கூறல் நல்லிணக்க செயல்பாடுகளை, நம்பிக்கைத் தன்மையுடன் முன்னெடுக்க எதிர்பார்க்கின்றோம். ஏற்கனவே இது தொடர்பில் நான் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளேன். பொறுப்புக்கூறல் நல்லிணக்க செயல்பாட்டை சகல தரப்பையும் இணைத்துக் கொண்டு சுமுகமான முறையில் முன்னெடுக்க முடியும்.

இம்முறை ஜெனிவா கூட்டத் தொடரில் எவ்வாறான பிரேரணைமுன்வைக்கப்படும் என்பதை பார்த்த பின்னரே அடுத்த கட்ட தீர்மானம் எடுக்கப்படும் - என்றும் கூறினார். (ஐ)

# எமது மக்கள் நிம்மதியாக வாழும் சூழலை இல்லாமல் செய்யவே இல்மனைட் அகழ்வு!

## கலையரசன் எம். பி. தெரிவிப்பு

திருக்கோவில், செப். 06

“நீண்டகால அழிவைச் சந்தித்து வாழ்வை முன்னெடுக்க முடியாது தத்தளிக்கும் எமது உறவுகள் நிம்மதியாக வாழக்கூடிய சூழலை இல்லாமல் செய்யும் செயல்பாடாகவே திருக்கோவில் பிரதேசத்தில் இல்மனைட் அகழ்வு விவகாரம் எழுந்திருக்கின்றது. இது திருக்கோவில் மக்களின் வாழ்க்கையைக் கேள்விக் குறியாக்குகின்றது.” - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த. கலையரசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் நேற்றுத் தெரிவிக்கையில்,

“எமது திருக்கோவில் பிரதேசத்தை அழிக்கின்ற நோக்கோடு முன்னெடுக்கப்பட இருக்கின்ற இல்மனைட் தாதுப் பொருள் அகழ்வு தொடர்பில் கலந்துரையாடியுள்ளோம். திருக்கோவில் பிரதேசம் கடலை அண்டிய மிகவும் வருமானம் குறைந்த குடும்பங்களைக் கொண்ட பிரதேசம்.

இங்கு இல்மனைட் என்று சொல்லப்படுகின்ற தாதுப்பொருள் அகழ்வை முன்னெடுப்பதற்குரிய பணிகளை சுமார் 7 வருடங்களாக மேற்கொள்கின்றபோது பிரதேச மக்களும் அரசியல்வாதிகளும் காட்டிய எதிர்ப்பின் காரணமாகத் தடுக்கப்பட்டிருந்தாலும் தற்போது இந்தச் செயல்பாட்டை ஆரம்பிப்பதற்குரிய பணிகள் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் எமது மக்களுக்குத் தெளிவூட்ட வேண்டியது எமது கடப்பாடாகும்.

ஒரு பிரதேசத்துக்குப் பொறுப்பான பிரதேச செயலாளர், பிரதேச சபைத் தவிசாளர் ஆகியோர் இருக்கின்ற நிலையில் இதற்கு மாறாக அம்பாறை மாவட்ட அரச அதிபர் காரியாலயத்திலே தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு இல்மனைட் அகழ்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக நாங்கள் அறிகின்றோம். இவ்வாறான செயல்பாடுகளை நாங்களும் எமது மக்களும் எதிர்க்கின்றோம்.

நீண்டகால ஒரு அழிவைச் சந்தித்து இந்தப் பிரதேசத்திலே தங்கள் வாழ்வை னெடுக்க முடியாமல் தத்தளிக்கும் எமது உறவுகள் சுதந்திரமாக - நிம்மதியாக வாழக் கூடிய ஒரு சூழலை இல்லாமல். செய்யும் விடயமாகவே இந்த இல்மனைட் அகழ்வு விடயம் அமையும்.

எமது பிரதேசத்தில் இவ்வாறான செயல்பாடுகளை உடனடியாக நிறுத்த வேண்டும் - என்றார். (ஐ)

## பிரித்தானியா...

னார். இந்நிலையிலேயே அவர் இன்று பிரதமராகப் பதவியேற்கவுள்ளார்.

கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைமைக்கு போட்டியிட்டபோது, அவர் தனது பிரசாரத்தில், போர் காலத்தின் போது இடம்பெற்றவை எனக் கூறப்படும் மனித உரிமைகள் மீறல், மனித குலத்துக்கு எதிரான நடவடிக்கைகள், போர் குற்றங்கள் தொடர்பில் இலங்கையை பொறுப்புக்கூறச் செய்வதில் உறுதியாக இருப்பேன்”, என்று தெரிவித்திருந்தமை நினைவுகூரத்தக்கது. (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 12 இல்)

## இலங்கைக்கு...

டத்தட்ட 400 கோடி (4 பில்லியன்) டொலர் மதிப்பிலான உணவு, நிதி உதவிகளை இந்தியா வழங்கி வருகிறது. இலங்கைக்கு நாங்கள் தொடர்ந்து உதவுகிறோம்.

இதன் மூலம், உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த உதவுகிறோம்.

2017இல் நிறுவப்பட்ட இந்தியா-ஐ.நா வளர்ச்சிக் கூட்டாண்மை நிதியம், ஐந்து ஆண்டு குறுகிய காலத்தில், இந்த நிதியம் 51 வளரும் நாடுகளுடன் இணைந்து 66 மேம்பாட்டுத் திட்டங்களுக்கான ஒரு துறையை உருவாக்கியுள்ளது.

உக்ரைன் போரின் தொடக்கத்திலிருந்து, தேவைப்படும் நாடுகளுக்கு இந்தியாவும் நிதி மற்றும் உணவு உதவிகளை வழங்கி வருகிறது. உணவு மற்றும் பொருட்கள் விநியோக சங்கிலிகள் அழிவால் ஏற்படும் பாதகமான விளைவுகளைத் தணிப்பதற்காக இந்தியா உதவிகளை வழங்கி வருகிறது.

கணிசமான மானியங்கள் மற்றும் கடன்களை வழங்குவதன் மூலம், தேவைப்படும் நாடுகளுக்கு நாங்கள் தொடர்ந்து உதவுகிறோம். மோதல்களுக்குப் பிந்தைய சூழ்நிலைகளில் இருதரப்பு மற்றும் பல தரப்பு மன்றங்கள் மூலம் நாங்கள் தொடர்ந்து உதவுகிறோம் - இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஐ)

## எரிவாயுவின்...

விலை 45 ரூபாயாலும், 2.3 கிலோ எரிவாயுவின் விலை 21 ரூபாயாலும் குறைக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன்படி, 12 கிலோ எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 4,551 ரூபாயாகவும் , 5 கிலோ சிலிண்டரின் விலை 1,827 ரூபாயாகவும், 2.3 கிலோ சிலிண்டரின் விலை 848 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உலக சந்தையின் எரிவாயு விலையை கருத்தில் கொண்டு விலை சூத்திரத்திற்கு அமைய, எரிவாயுவின் விலையை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தாய், பிள்ளைகள்...

வாய்க்கிழமை முதல் எதிவரும் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை கூடுவதற்கு பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழு தீர்மானித்துள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி சட்டமூலம் மற்றும் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (நிர்வாகம்) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.30 இல் இருந்து 10.45மணி வரை சமர்ப்பித்து, விவாதிக்காமல் அனுமதித்துக் கொள்ள இருக்கின்றது.

அத்துடன், வருட மத்தியில் அரச நிதி நிலைமை தொடர்பான அறிக்கை (2022 வருடத்துக்கான) தொடர்பில் சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் எதிர்வரும் 8 ஆம் திகதி நடத்த இருக்கின்றது. (ஐ)

## பிரான்ஸிலிருந்து...

களில் அவர் பிரான்ஸூக்கு திரும்பவிருந்தார்.

இந்நிலையில், சனிக்கிழமை தேவையின் நிமித்தம் மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். வீட்டிலிருந்து குறுகிய தூரமே சென்ற நிலையில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த அவர் மின்கம்பத்துடன் மோதுண்டு விபத்துக்கு இலக்கானார்.

உடனடியாக வரணி பிரதேச மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்ட அவர், பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். பின்னர் அங்கிருந்து யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்த மரணம் குறித்து யாழ். போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை நடத்தினார். (ஐ-2)

ஈழநாடு
Eelanadu

# ஐ. நா. சபையில் ஜனாதிபதி கூறியவற்றை அவரே மறுத்து நடப்பதை ஏற்கமுடியாது!

## செல்வம் அடைக்கலநாதன்

வவுனியா, செப். 06

ஜனாதிபதியாக வந்த ரணில் விக்ரமசிங்க ஐ. நா. சபை யிலே கூறி வந்த கூற்றை, இப்போது மறுத்து நடக் கின்ற செயல்பாட்டை அவர் செய்து வருவதை ஏற்றுக் கொள்ள முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி நல்லாட்சி அரசாங்கத்திலே ஐ. நா. சபை யிடம் பல கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக வாக்கு றுதி அளித்திருந்தார். அதிலே ஒன்று பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதாக கூறியிருந்தார். அதே பிரதமர் இப்போது ஜனாதிபதியாக வந்திருக்கின்ற சூழலிலே அவர் கொடுத்த வாக்குறுதி என்பது மறுக்கப் பட்டிருக்கிறது.

மீண்டும் பயங்கரவாத தடை சட்டத்தை ஜனாதிபதி கையில் எடுத்திருக்கிறார். ஆகவே ஐநாக்கு ஒன்று கூறுவதும், வெளியே ஒன்றை செய்வதுமாக இருக்கின்ற சூழலை நாங்கள் பார்க்கக்கூடியதாக இருக்கிறது.

தேசிய பாதுகாப்பு சட்டம் என்பதும், பயங்கரவாத தடை சட்டமும் ஒன்றாகத்தான் இருக்கும் என்று கூறு வதைவிட மோசமாக இருக்கும் என்று நான் கருதுகி றேன். ஆகவே பிரதமராக இருந்து ஜனாதிபதியாக வந்த ரணில் விக்ரமசிங்க ஐ. நா. சபையிலே கூறி வந்த அந்த கூற்றை இப்போது மறுத்து நடக்கின்ற செயல்பாட்டை அவர் செய்து வருவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

கூறிய வார்த்தை நடைமுறைப்படுத்தப்பட வேண் டும். என்னை பொறுத்தமட்டிலே சட்டங்கள் மாறுகின் றது எல்லாம் பயங்கரவாத தடை சட்டத்தின் அடிப் படையாகத்தான் வரும் என்பது என்னுடைய கருத்து.

ஆகவே, ஜனாதிபதி அவர்கள் மீள் பரிசீலனை செய்ய வேண்டும். ஐ. நாவுக்கு கொடுத்த வாக்குறுதியை, சந்தர்ப்பத்தை ஜனாதிபதி நிறைவேற்றிகொள்ள வேண் டும் என்று அவர்களிடம் கோரிக்கை வைக்கின்றேன்.

அதை விட ஏற்கனவே அவர் மீது குற்றச்சாட்டு இருக்கிறது. தமிழ் மக்களை, தமிழ் இனத்தை, ஏன் இலங்கை நாட்டையே குட்டிச்சுவராக்கிய மகிந்த குடும்பத்தை காப்பாற்றுகின்ற ஒரு செயல்பாட்டை அவர் செய்து கொண்டு இருப்பதனை நாங்கள் காணக்கூடியதாக இருக்கிறது.

அந்தவகையிலே இந்த சட்டங்களின் ஊடாக ஜன நாயக நீரோட்டத்திலே இந்த குடும்பத்துக்கு எதிராக போராடியவர்களை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்துவது என் பது உண்மையிலே அந்த குடும்பத்தை காப்பாற்றுகின்ற ஒரு செயல்பாடாகத்தான் காணக்கூடியதாக இருக்கும்.

தற்போது புதிய ஜனாதிபதியாக ஒருவர் வந்திருக்கி றார் என்றால் அந்த போராட்டத்தின் பின்னணிதான். ஆகவே மகிந்த குடும்பத்தை எதிர்க்கின்ற வகையிலே தான் இந்த போராட்டம் இருந்தது. ஆனால், இப்போது இந்த சட்டங்களின் ஊடாக போராடியவர்களை கைது செய்து சிறையிலே அடைப்பது என்பது மகிந்த குடும் பத்தை காப்பாற்றுகின்ற ஒரு செல்பாட்டை ஜனாதிபதி செய்ய துணிகிறார் என்ற ஒரு சந்தேகம் எங்களுக்கு எழுகிறது.

அந்தவகையிலே இந்த விடயத்திலே மக்களினுடைய ஜனநாயக போராட்டத்தின் ஊடாக தான் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வந்தார். ஆகவே அந்த விடயத்தை கவனத்தில் எடுக்க வேண்டும் என்பதனை கூறி கொள்ள விரும்புகிறேன் என்றார். (ஐ)

# டொலர்களை பயன்படுத்தி வீடு வாங்கினால் சலுகை!

## நகர அபிவிருத்தி அதிகார சபை

கொழும்பு, செப். 06

டொலர்களைப் பயன்படுத்தி வீடுகளை கொள்வனவு செய்யும் வெளிநாட்டு இலங்கையர்கள் மற்றும் தொழி லாளர்களுக்கு சலுகை வழங்குவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை தீர்மானித்துள்ளது.

அதன்படி, டொலர்களை பயன்படுத்தி வீடுகளை கொள்வனவு செய்பவர்களுக்கு 10வீதம் சலுகை வழங்கு வதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையின் முகாமைத் துவ சபை அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய, நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்படும் நடுத்தர வருமான வீட்டுத் திட்டங் களில் வீடுகளை கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கும்.

நாட்டில் நிலவும் டொலர் நெருக்கடிக்கு மற்றொரு தீர்வாக இந்த புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபையால் நடைமுறைப் படுத்தப்படும் இரண்டு நடுத்தர வருமான வீட்டுத் திட் டங்களான பொரளை ஓவல் வியூ வீடமைப்புத் திட்டத் தில் 608 வீடுகளும் அங்கொட லேக் ரெஸ்ட் திட்டத் தில் 500 வீடுகளும் உள்ளன.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் மற்றும் தொழி லாளர்களுக்கு டொலர்களை பயன்படுத்தி இந்த வீடு களை கொள்வனவு செய்வதற்கான வசதிகள் ஏற்படுத் தப்பட்டுள்ளன என்று நகர அபிவிருத்தி மற்றும் வீட மைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள் ளார்.

# ஒரு மணிநேர மின்வெட்டு!

கொழும்பு, செப். 06

நாட்டில் இன்று செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வ ரும் 09 ஆம் திகதி வரை தினமும் ஒரு மணிநேரம் மட் டுமே மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, ஏ, பி, சி, டி, ஈ, எவ், ஜீ, எச், ஐ, ஜே, கே, எல், பி, கியூ, எஸ், ரி, யூ, வி, டபிள்யூ ஆகிய வலயங்க ளுக்கு இன்று முதல் 09ஆம் திகதி வரை மாலை 06.00 மணி முதல் இரவு 09:00 மணி வரையான காலப்பகுதி யில் சுழற்சி முறையில் ஒரு மணி நேரம் மட்டுமே மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது. (ஐ)

# ஜனாதிபதி, பிரதமரின் அதிகாரங்கள் 22ஆம் திருத்தம் மூலம் பகிரப்படும்!

## வெளிவிவகார அமைச்சர்

கொழும்பு, செப். 06

அரசமைப்பின் 22வது திருத்தம் நிறைவேற்றப்பட்டு வதன் மூலம் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் அதிகாரங் கள் பகிரப்படும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் நேற்று பேசிய அவர், அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட பெரும்பாலான கட்டமைப்பு கள் அரசியலமைப்பின் 22ஆவது திருத்தம் நிறைவேற்றப் படும் போது மீண்டும் திரும்பும் என தெரிவித்தார்.

முன்னர் திட்டமிடப்பட்ட இடைக்கால ஏற் பாட்டை தக்கவைக்க தற்போதைய ஜனாதிபதி விரும்ப வில்லை என்றும் 19ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தவே அவர் விரும்புகிறார் எனவும் வெளி விவகார அமைச்சர் தெரிவித்தார்.

சர்வதேச மற்றும் பிராந்திய ரீதியில் ஏற்றுக்கொள் ளப்பட்ட சிறந்த நடைமுறைகளுக்கு அமைவாக தேசிய பாதுகாப்பு, மனித உரிமைகள் மற்றும் மனித சுதந்தி ரத்தை சமநிலைப்படுத்துவதற்கும் சர்ச்சைக்குரிய பயங் கரவாதத் தடைச் சட்டத்திற்குப் பதிலாக புதிய சட் டத்தை தயாரிப்பதற்கும் இலங்கை தயாராகி வருகிறது என்றும் அவர் கூறினார். (ஐ)

# முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய மீண்டும் அரசியலுக்கு வரக்கூடாது!

## குமார வெல்கம எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, செப். 06

கோட்டாபய அரசியலுக்கு பொருத்தமானவர் இல்லை. அவர், மீண்டும் அரசியலில் ஈடுபடக் கூடாது என்று பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம கூறி யுள்ளார்.

புதிய இலங்கை சுதந்திரக் கட்சி யின் தலைமை அலுவலகத்தை திறந்து வைக்கும் நிகழ்வின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

பல இலக்குகளை மனதில் வைத்து புதிய பயணத்தை ஆரம் பித்துள்ளேன். நாடு திரும்பியுள்ள முன்னாள் ஜனாதிபதிக்கு வாழ்த் துக்களை தெரிவிக்கிறேன். எனி னும், முன்னாள் ஜனாதிபதி மீண் டும் அரசியலில் ஈடுபடக்கூடாது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ அரசியலுக்கு பொருத்தமானவர் இல்லை. அவர் மீண்டும் அரசியலில் ஈடுபடக் கூடாது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சிறந்த தனிமனிதர். ஆனால், அவர் தனது குடும்பத் துக்கு முன்னுரிமையளித்தார் - என் றார். (ஐ)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 03.09.2021 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவி

## தம்பிராசா பாக்கியம்

அவர்களின் முதலாம் ஆண்டு கிரியைகள் இன்று (06.09.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் நடைபெறும் அன்னாரின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அடைக்கின்றோம்.

44/16 சங்கிலியன் வீதி, நல்லூர்.

குடும்பத்தினர்.


# கோதுமை மா உற்பத்தியை அதிகரிக்குமாறு நிறுவனங்களை கேட்டார் வர்த்தக அமைச்சர்!

கொழும்பு, செப். 06

கோதுமை மா உற்பத்தித் திறனை அதிகரிக்குமாறு கோதுமை மா உற்பத்தி நிறுவனங்களிடம் ஏற்க னவே கேட்டுள்ளதாக வர்த்தக, வர்த்தக மற்றும் உணவுப் பாது காப்பு அமைச்சர் நளின் பெர் னாண்டோ தெரிவித்துள் ளார்.

அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் முன் னிலையில் நேற்று திங்கட்கிழமை காலை அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அமைச்சர் இதனைத் தெரிவித்துள் ளார்.

இதன்படி எதிர்காலத்தில் கோதுமை மாவுக்கு தட்டுப்பாடு ஏற்படாது எனவும் மாவின் விலையை அதிகரிக்க வேண்டிய அவசியமில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் நிலவும் கேள் வியை பூர்த்தி செய்வதற்கு துருக்கி மற்றும் துபாயிலிருந்து கோதுமை மா இறக்குமதிசெய்ய அங்குள்ள ஏற்றுமதியாளர்களுடன் பேச்சுகளு டன் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர் னாண்டோ தெரிவித்துள்ளார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.09.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.